# வெல்வெட் கில்லர்




**வி**வேக் மாருதி ஜென்னை எண்பதில் விரட்டிக் கொண்டிருக்க - பக்கத்தில் உட்கார்ந்திருந்த விஷ்ணு கேட்டான்.

''பாஸ்...''

''ம்...''

''இப்போ எங்கே போயிட்டிருக்கோம்...?''

ஈஸ்ட் கோஸ்ட் ரோடு வெய்யிலில் காயப்போட்ட ரிப்பன் போல் கிடக்க - விவேக் காரின் ஆக்ஸிலேட்டரை மிதிக்க - ஸ்பீடாமீட்டரின் சிவப்பு முள் ஜிவ்வென்று 90ஐத் தொட்டது. விவேக் விஷ்ணுவை அரைப் பார்வை பார்த்துவிட்டு புன்னகைத்தான். பிறகு மறுபடியும் ரோட்டில் கவனமானான்.

''பாஸ்...! இந்தப் புன்னகை பாஷையெல்லாம் ரூபலா மேடத்துக்குத்தான் தெரியும். எனக்குத் தெரியாது. நான் கார்ல ஏறி உட்கார்ந்து அரைமணி நேரமாச்சு. நாம எங்கே போறோம்னு இதுவரைக்கும் பதினோரு தடவை கேட்டாச்சு. பதினோரு தடவையும் நீங்க வாயைத் திறக்காமே ஏதோ



நாய்க்கு 'பொறை' வீசற மாதிரி ஒரு கால் புன்னகை, அரைப் புன்னகை வீசிட்டு காரை விரட்றீங்க... இப்போ பனிரெண்டாவது தடவையா கேட்கிறேன்... நாம இப்போ எங்கே போறோம் பாஸ்?''

''தொ.வா...'' என்றான் விவேக்.

''தொ.வா... அப்படீன்னா...?''

''தொண தொணக்காம வாடா'ன்னு அர்த்தம். நான் எங்கே போயிட்டிருக்கேன்னு தெரிஞ்சிருந்தா நீ கார்ல ஏறும்போதே சொல்லியிருக்கமாட்டேனா என்ன...?''

''அப்படீன்னா... இப்போ எங்கே போயிட்டிருக்கோம்ன்னு உங்களுக்கே தெரியாதா...?''

''தெரியாது.''

''டேய்... விஷ்ணு... ஒரு மணி நேரத்துக்கு முந்தி சி.பி.ஐ. டைரக்டர் மனோரஞ்சன் எனக்கு போன் பண்ணினார். அவர் எனக்குப் போன் பண்ணும்போது மணி சரியாய் ஒன்பது. போன்ல அவர் சொன்ன விஷயம் இதுதான்: 'விவேக்! நீங்களும் விஷ்ணுவும் சரியா ஒன்பதரை மணிக்கு உங்க கார்ல வீட்டை விட்டுப் புறப்படுங்க. ஈஸ்ட் கோஸ்ட் ரோட்டில் பயணம். பத்து மணிக்கு ஹோட்டல் லீல் மஹாலைத் தாண்டி ரோட்டோரமாய் இருக்கிற ஒரு ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டாரண்டுக்குப் பக்கத்தில் காரை நிறுத்திகிட்டு வெயிட் பண்ணுங்க. நான் செல்போன்ல உங்களைக் காண்டாக்ட் பண்ணி மேற்கொண்டு எங்கே போகணும்ன்னு சொல்றேன்'னு சொன்னார். இப்போ நாம லீல் மஹால் ஹோட்டலை நெருங்கிட்டிருக்கோம்...''

''அப்படீன்னா... இது திமிங்கலம்தான் பாஸ்.''

''திமிங்கலமா...?''

''ஆமா... பாஸ்... ஏதோ ஒரு பெரிய கேஸ்ல மாட்டிக்கப் போறோம்ன்னு நினைக்கிறேன்...''

''பார்க்கலாம்...! இன்னும் ஒரு பத்து நிமிஷத்துல விஷயம் என்னான்னு தெரிஞ்சுடும்...''

கார் வீல் மஹாலைத் தாண்டியது.

நூறு மீட்டர் தூரத்திற்குள்ளாகவே அந்த ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டாரண்ட் வர்ணக் குடைகளோடு தெரிந்தது.

''சூப்பர்...!'' என்றான் விஷ்ணு.

''டேய்...! அது ஒரு சாதரண ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டாரெண்ட். அதைப் போய் சூப்பர்னு சொல்றியே...?''

''அதை சூப்பர்ன்னு யார் சொன்னாங்க பாஸ்? ரெஸ்டாரண்டுக்கு முன்னாடி ஒரு லேடீஸ் காலேஜ் பஸ் நிக்குதே... அதைச் சொன்னேன். காலைப் பேப்பர்ல என்னோட கன்னி ராசிக்கு என்ன ராசி பலன் போட்டிருந்தாங்க தெரியுமா பாஸ்...?''

''சொல்லு...''

''பெண்களால் ஆதாயம்...''

விவேக் காரை அந்த பஸ்ஸுக்கு கொஞ்சம் தள்ளி நிறுத்தினான். விஷ்ணு கண்ணாடியில் முகம் பார்த்து இடது கை விரல்களால் தலையை வாரிவிட்டுக் கொண்டான்.

''பாஸ்...! ஏதாவது சாப்ட்றீங்களா...?''

''வேண்டாம்...''

''பப்ஸ்...''

''நோ...''



''பிஸ்ஸா...''

''ஒண்ணும் வேண்டாம். வீட்டை விட்டுப் புறப்படும்போது தானே டிபன் சாப்பிட்டோம்...''

''எனக்குப் பசிக்குது பாஸ்...''

''ஏண்டா... நீ ஏழு பூரி... ரெண்டு கப் காபி சாப்பிட்டு இன்னும் அரை மணி நேரம் கூட ஆகலையே... அதுக்குள்ளே எப்படிடா பசிக்கும்...?''

''அது என்னவோ தெரியலை பாஸ். ரெண்டு நாளா அகோரப் பசி. நேத்திக்கு பாருங்க பாஸ் ஹோட்டல்ல ஃபுல்லா சாப்ட்டுட்டு வாஷ்பேசின்ல கைகழுவிகிட்டு இருக்கும் போதே பசி லேசா வயித்தைப் பிறாண்டுது.''

''டேய்...! நீ அந்த ரெஸ்டாரெண்ட்டுக்குள்ளே போய் அங்கே சாப்பிட்டுகிட்டு இருக்கிற பொண்ணுங்களைப் பார்க்கணும். அதுதானே...?''

''சேச்சே...! உண்மையிலே பசி பாஸ்.''

''சரி... போகட்டும் வா...''

''தேங்க்யூ பாஸ்...'' விஷ்ணு சொல்லிக் கொண்டே காரினின்றும் இறங்கி ரெஸ்டாரெண்ட்டுக்குள் நுழைந்தான். ரெஸ்டாரெண்டில் எல்லா மேஜைகளிலும் கல்லூரி மாணவிகள். சளசள வென்ற பேச்சொலி.

''சுதா... வேண்டாம்... இதோடு நிறுத்திக்க... இது நாலாவது பிஸ்ஸா... இப்பவே நீ செமகுண்டு... அப்புறம் உன்னோட அப்பாவும் அம்மாவும் உகாண்டாவுக்குப் போக வேண்டியிருக்கும்.''

''அவங்க எதுக்கு உகாண்டாவுக்குப் போகணும்?''

''உனக்கு மாப்பிள்ளை பார்க்கத்தான்... நம்ம நாட்லதான் நீர்யானைகள் கிடையாதே...?''

''ஏய்... பார்டி இவளை...''

விஷ்ணு நான்கைந்து டேபிள்களைக் கடந்து வாஷ்பேசினில் கை கழுவிக்கொண்டிருந்த ஒரு சுடிதார்க்கு முன்னால் போய் நின்றான். மனசுக்குள் ஒரு புதுக்கவிதை பிறந்தது.

**சுடிதார்க்குள்**

**ஒரு**

**சூரியகாந்தி.**

''எக்ஸ்க்யூஸ்மீ...'' விஷ்ணு கூப்பிட அந்தப் பெண் பூப்போட்ட சிறிய கர்ச்சீப்பால் வாயை ஒற்றிக்கொண்டே ''எஸ்'' என்றாள்.

''பாலா நல்லாயிருக்கானா...?''

அந்தப் பெண்ணின் புருவங்கள் உயர்ந்தன.

''பாலாவா... யாரது...?''

''நீங்க பாலகிருஷ்ணனோட சிஸ்டர் குமுதாதானே?''

''ஸாரி... நான் குமுதா கிடையாது... யூ ஆர் மிஸ்டேக்கன் மீது...''

''என்ன ஒரு ஆச்சர்யம் பார்த்தீங்களா...? என்னோட ஃப்ரண்ட் பாலாவோட சிஸ்டர் குமுதா உங்க மாதிரியே ஃபேரா - அழகா இருப்பாங்க. அதுதான் ஏமாந்துட்டேன்... ஆண்டவனின் படைப்பில்தான் எவ்வளவு விநோதம்...?'' விஷ்ணு தோள்களைக் குலுக்கினான்.

அந்தப் பெண் முறைத்துக் கொண்டே போய்விட விஷ்ணு வாஷ்பேசினின் தடுப்பு மறைவில் நின்று கொண்டு தன் செல்போனை உயிர்ப்பித்து பேசினான்.

''பாஸ்... நான்தான்...''

''சொல்லுடா...''



''சி.பி.ஐ. டைரக்டர்கிட்டேயிருந்து போன் வந்ததா?''

''இல்லை... அதுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்... நீ என்ன பண்ணிட்டிருக்கே... சாப்ட்றியா...?''

''பாஸ்... நான் இந்த ரெஸ்டாரெண்ட்டுக்குள்ளே சாப்பிட வரலை...''

''அதுதான் தெரியுமே... பார்க்க வேண்டியவங்களையெல்லாம் பார்த்துட்டு வா...''

''நான் அதுக்காகவும் ரெஸ்டாரெண்ட்டுக்குள்ளே வரலை பாஸ்...''

''பின்னே எதுக்கடா...?''

''பாஸ்...! எனக்கு கழுகுப் பார்வைன்னு ஒரு தடவை சர்டிபிகேட் கொடுத்தீங்களே... ஞாபகம் இருக்கா...?''

''இல்லாமே என்ன... இருக்கு...?''

''அதை மறுபடியும் ஒரு தடவை நிரூபிச்சுட்டேன்... நம்ம கார் ரெஸ்டாரெண்ட்டுக்கு முன்னாடி வந்து நின்னதுமே ஒரு விஷயத்தை நோட் பண்ணிட்டேன்... டேபிள்ல உட்கார்ந்து எதையோ ஃபோர்க்கால குத்திக் கிளறி சாப்பிட்டுகிட்டு இருந்த ஒருத்தன் உங்களையும் என்னையும் பார்த்ததும் முகம் இருண்டு போய் மெல்ல எழுந்து ரெஸ்டாரெண்ட்டுக்குப் பக்கத்தில் இருந்த டாய்லட்டுக்குள்ளே போய் நுழைஞ்சுட்டான்.''

''அப்படியா...?''

''என்னோட ரெண்டு கண்களையும் ஒரு கோடி ரூபாய்க்கு இன்சூர் பண்ணிடலாமா பாஸ்...''

''யார்ரா அவன்...? எப்படியிருந்தான்...?''

''தமிழ் சினிமாவில பொன்னம்பலம்ன்னு ஒரு வில்லன் நடிகர் வருவாரே...?''

"ஆமா..."

"அவர்க்கு தம்பி மாதிரி இருப்பான். ரோஸ் கலர்ல டீ ஷர்ட். கறுப்பு ஜீன்ஸ் பேண்ட். மீசையும் தாடியும் இல்லாத முகம்.

"அவன்கிட்டே ஏதோ தப்பு இருக்குன்னு நினைக்கறியா?"

"கண்டிப்பா பாஸ்..."

"டாய்லட்டுக்குள்ளே போனவன் இன்னும் வெளியே வரலை...?"

"வரலை பாஸ்...! நாம இங்கிருந்து கிளம்பிப் போகிற வரைக்கும் டாய்லட்டிலிருந்து வரமாட்டான்..."

"சரி...! இப்ப நீ என்ன பண்ணப்போறே?"

"டாய்லட்டுக்குள்ளேயே போய் அவனை மடக்கப் போறேன்...!"

"எப்படி...?"

"ரீடா இருக்கும்போது என்ன கவலை பாஸ்?"

"அது யார்ரா ரீடா..?"

"என்னோட ரிவால்வர்க்கு நான் வெச்சிருக்கிற பேர் பாஸ்... நீங்க அடிக்கடி மறந்துடறீங்க பாஸ்..."

"உதவிக்கு நானும் வரட்டுமா... உன்னாலே தனியா ஹேண்டில் பண்ண முடியுமா...?"

"அந்த சிறுநரியை மடக்க இந்த சிறுநரியே போதும் பாஸ்...! சிங்கம் எதுக்கு...?"

"சரி... பத்திரம்..."

விஷ்ணு செல்போனை அணைத்து சட்டைப் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு இடுப்பின் இடது பக்கத்தில் இருந்த



ரீடாவைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். கல்லூரி மாணவிகள் சளசளவென்று பேசி சாப்பிட்டுக் கொண்டிருக்க - விஷ்ணு டாய்லட்டை நோக்கிப் போனான். '**GENTS**' என்று எழுதப்பட்டிருந்த கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

அந்த ரோஸ் கலர் டீ சர்ட் பேர்வழி தன் அகலமான முதுகைக் காட்டிக் கொண்டு 'மூச்சா' போய்க் கொண்டிருந்தான். விஷ்ணு அவனை நெருங்கி மெல்ல குரல் கொடுத்தான்.

"உண்மையிலேயே இது கின்னஸ் சாதனைதான். கடந்த பத்து நிமிஷமா தொடர்ச்சியாய் 'மூச்சா' போன ஆள் இந்த உலகத்திலேயே நீ ஒருத்தன்தான். கின்னஸுக்கு அப்ளை பண்ணிட்டியா...? இல்ல இனிமேத்தான் பண்ணணுமா...?"

அவன் திரும்பாமல் அப்படியே நின்றிருந்தான்.


"ஓ...! நீ இன்னமும் 'மூச்சா' போய்கிட்டு இருக்கியா...? சரி... வேலையை முடி... அப்புறமா பேசிக்குவோம்..." விஷ்ணு சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவன் விருட்டென்று திரும்பி உலக்கை போல் இருந்த இடது கையால் விஷ்ணுவின் முகத்தில் இடியாய் ஒரு அடியை இறக்கினான்.

விஷ்ணு பொறி கலங்கிப் போய் பின் பக்கம் இருந்த வாஷ் பேசினுக்குப் போய் முட்டிக் கொண்டு கீழே விழுந்தான்.

கண்களுக்குள் இருட்டு பாய்ந்தது. இடுப்புக்குக் கையைக் கொண்டு போய் ரீடாவை எடுக்க முயல - அடிவயிற்றில் மூர்க்கமாய் பூட்ஸ் உதை விழுந்தது.

விஷ்ணு எழ முயன்று முடியாமல் அப்படியே மடங்கி விழுந்து ஒரு அவசர மயக்கத்துக்குப் போக - ரோஸ் நிற டீ ஷர்ட் பேர்வழி, விஷ்ணுவின் இடுப்பிலிருந்த ரிவால்வரைப் பறித்து எடுத்துக் கொண்டு வெளியே போவதற்காக டாய்லட் கதவைத் திறந்தான்.

விவேக்.




'ஒலிம்பிக் ப்ரஸ் மீட்' பொன்னிற ஆங்கில எழுத்துக்கள் சிவப்பு வெல்வெட் துணியில் வீடியோ வெளிச்சத்தில் மின்னிக் கொண்டிருக்க - இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் ராஜவர்மா அரங்கில் நிரம்பியிருந்த பத்திரிகையாளர்களைப் பார்த்து சன்னமான குரலில் மைக்கில் பேசிக் கொண்டிருந்தார்.

"ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளப் போகும் இந்திய வீரர்களையும் வீராங்கனைகளையும் ப்ரஸ் மீடியாவுக்கும், டி.வி. மீடியாவுக்கும் அறிமுகப்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கூட்டத்துக்கு வருகை தந்து இருக்கும் உங்கள் எல்லோரையும் 'வருக... வருக'வென்று வரவேற்று உள்ளம் மகிழ்கிறேன். ஒலிம்பிக் என்பது ஒரு விளையாட்டு போட்டி மட்டும் அல்ல. ஒரு உன்னதமான திருவிழா. இந்தத் திருவிழாவில் பதக்கங்கள் பெறுவது என்பது பெருமைக்குரிய ஒன்று. 109 கோடி ஜனத்தொகை கொண்ட - உலகத்திலேயே இரண்டாவது பெரிய ஜனநாயக நாடான நம் இந்தியா பதக்கங்கள் பெறுவதில் காலம் காலமாய் பின் தங்கியே வந்து இருக்கிறது. ஆனால் இப்போது நிலைமை தலைகீழ். இந்த முறை ஏதென்ஸில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் நாம் பதக்கங்களை வாரிக் கொண்டு வரப் போகிறோம்..."

முன்வரிசையில் உட்கார்ந்திருந்த ஒரு மூத்த நிருபர் ஒரு நமட்டுச் சிரிப்போடு எழுந்தார்.

"கடந்த பன்னிரெண்டு வருஷங்களாய் இதே மாதிரி நீங்கள் பேசிக் கொண்டிருப்பது உங்களுக்கு சலிப்பைத் தரவில்லையா...?"

எல்லோரும் சிரிக்க, ஒலிம்பிக் சங்கத் தலைவர் ராஜவர்மா அந்தச் சிரிப்பைக் கையமர்த்தி அடக்கிவிட்டு பேச்சைத் தொடர்ந்தார்.



"முன்பு நான் அப்படிப் பேசியது ஒரு சம்பிரதாயத்துக்காகத்தான் என்பதை இப்போது ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நான் இப்போது பேசிக்கொண்டிருப்பது சம்பிரதாயப் பேச்சு அல்ல. நான் கடந்த ஆறு மாதங்களை ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளப் போகும் நம் வீரர்களோடும், அவர்களுக்கு பயிற்சி தரும் கோச்சுகளோடும் கழித்து வீரர்களின் திறமையைப் பார்த்து வியந்து போனவன் நான். ஒலிம்பிக் பதக்கப் பட்டியலில் நம் நாடு ஒரு பெருமைக்குரிய இடத்தில் இருக்கும் என்பது உறுதி..."

"எவ்வளவு தங்கப் பதக்கம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள்...?" இன்னொரு நிருபர் எழுந்து கேட்டார்.

"குறைந்த பட்சம் ஐந்து..."

"இது பேராசை..." கும்பலில் யாரோ ஒருவர் சொல்ல மீண்டும் கூட்டத்தில் சிரிப்புச் சத்தம்.

ராஜவர்மா சிரிப்போசை தேயும்வரை காத்திருந்துவிட்டு பேச்சைத் தொடர்ந்தார்.

"ஒலிம்பிக் போட்டி முடிந்ததும் இதே போல் ஒரு ப்ரஸ் மீட் ஏற்பாடு செய்து அந்த ஐந்து தங்கப் பதக்கங்களையும் உங்களுக்கு காட்டத்தான் போகிறேன். இப்போது கேலி பேசிச் சிரித்தவர்கள் எல்லாம் அப்போது கரவொலி எழுப்பி பாராட்டத்தான் போகிறீர்கள்."

"எந்த எந்த போட்டிகளில் நமக்கு தங்கம் கிடைக்க வாய்ப்புள்ளது என்று நினைக்கிறீர்கள்...?"

"தடகளப் போட்டிகளிலும், துப்பாக்கி சுடுதல் போட்டிகளிலும் தங்கம் கிடைக்க 99% வாய்ப்பு உள்ளது. தடகளப் போட்டிகளில் 100 மீட்டர், 400 மீட்டர், 1500 மீட்டர் பந்தயங்களில் நம்முடைய ஓட்டப் பந்தய வீராங்கனை கேரளாவைச் சேர்ந்த சில்பா நம்பியார் புயல் வேகத் திறமையைக்

காட்ட இருக்கிறார். சென்ற வாரம் நடந்த பயிற்சி ஓட்டத்தில் சில்பா நம்பியார் நூறு மீட்டர் தூரத்தை 9.45 விநாடிகளில் கடந்துள்ளார். இவர் மட்டுமே தங்கப் பதக்கங்களைத் தட்டிக் கொண்டு வருவார் என்று உறுதியாய் நம்பலாம். அடுத்த படியாய் துப்பாக்கி சுடுதல் போட்டியில் பஞ்சாப்பை சேர்ந்த டாண்டன் மிகச்சிறந்த திறமைசாலியாய் உருவாகியுள்ளார். இவர் இரண்டு பந்தயங்களில் தங்கம் பெறுவது சர்வ நிச்சயமான ஒன்று.''

''ஹாக்கியில் நாம் தங்கம் வெல்ல முடியாது என்று நினைக் கிறீர்களா...?''

''ஹாக்கிப் போட்டியில் நாம் கடுமையாகப் போராடினால் மட்டுமே பதக்கம் பெறும் வாய்ப்பை நெருங்குவோம். இந்தியா விளையாடும் அணியில் உள்ள எல்லா நாடுகளும் ஹாக்கியில் பலம் பொருந்தியவை. ஒவ்வொரு லீக் ஆட் டத்தையும் நாம் ஃபைனல்ஸ் ஆட்டமாக நினைத்து விளையாட வேண்டிய கட்டாயம் உள்ளது. அப்படி விளையாடினால் மட்டுமே நம்முடைய பதக்கக் கனவு நனவாகும்.''

''பளு தூக்கும் போட்டியில் நம்முடைய பதக்க வாய்ப்பு எப்படி...?''

''மத்திய பிரதேசத்து வீரர் 'கஜோத்' தங்கத்தை வென்றே காட்டுவேன் என்று சபதம் போட்டு பயிற்சி எடுத்துள்ளார். ஆசிய விளையாட்டுப் போட்டியில் அவர் தங்கம் வாங் கியதை நாம் மறக்க முடியுமா என்ன...?

''நம் இந்திய வீரர்களும், வீராங்கனைகளும் இந்தியாவில் இருக்கும்வரை உற்சாகமாகவும், ஆரோக்யமாகவும் இருக் கிறார்கள். ஆனால் போட்டிகள் நடக்கும் நாட்டுக்குச் சென்ற துமே சோர்ந்து போய் விடுகிறார்கள். பளு தூக்கும் போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு முதுகு வலியும், தடகளப் போட்டியில் ஓட இருப்பவர்களுக்கு குதிகால் வலியும் வருவது ஏன்...?''



''காரணம்... அந்த நாட்டின் சீதோஷ்ண நிலையும் உணவுப் பழக்கங்களும்தான்...! இந்த தடவை அது மாதிரி நேராமல் பார்த்துக் கொள்வோம். நம்முடைய வீரர்களும், வீராங் கனைகளும் வெற்றி பெற பத்திரிகை மீடியாவும், டி.வி. மீடியாவும் அவர்களை ஆரோக்கியமான முறையில் விமர் சனம் செய்ய வேண்டும். நம்முடைய வீரர்களை நாமே டிஸ்கரேஜ் செய்தால் அவர்கள் மனரீதியாய் பாதிக்கப்படு வார்கள். விளையாட்டு என்று வந்தாலே ஒருவர்க்கு தோல்வி யும் இன்னொருவர்க்கு வெற்றியும் கிடைப்பது இயல்பு. நம்முடைய வீரர்கள் தோல்வியடைந்தால் அவர்களை பரிகாசம் செய்யாமல் இருந்தாலே போதும்... இன்னும் அரை மணி நேரத்தில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள இருக்கும் 59 வீரர்களும் 18 வீராங்கனை களும் இந்த அரங்கில் உங்களை சந்திக்க இருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் வாழ்த்துக்களையும், பாராட்டுதல் களையும் வழங்க வேண்டும்.''

ராஜவர்மா பேச்சை முடித்துக் கொண்டு தன்னுடைய நாற்காலிக்கு வந்து உட்கார்ந்தார். அடுத்தபடியாய் ஒலிம்பிக் சங்கத்தின் செயலாளர் அசோக்குமார் மைக்கைப் பிடித்துப் பேச ஆரம்பித்தார். அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே ராஜவர்மாவுக்கு பின்னால் அவருடைய உதவியாளர் வந்து தயக்கமாய் நின்றார்.

''ஸார்...''

''என்ன... ராம்...?''

''ஒரு தகவல் ஸார்.''

''சொல்லு...''

''சில்பா நம்பியார் இன்னும் அரங்குக்கு வந்து சேரவில்ல''

''மற்ற வீரர், வீராங்கனைகள் வந்து விட்டார்களா...?''

"சில்பா நம்பியாரைத் தவிர எல்லோரும் வந்து விட்டார்கள்."

"செல்போனில் அவரைத் தொடர்பு கொண்டீர்களா?"

"தொடர்பு கொண்டேன்... நோ ரிப்ளை ஸார்."

"நோ ரிப்ளை என்றால்...?"

"இப்போதைக்கு தொடர்பு கொள்ள முடியாது என்று ரிக்கார்டட் வாய்ஸ் கேட்கிறது..."

"சரி... நீ போ... நான் அவரிடம் பேசிக் கொள்கிறேன்..."

"எஸ்... ஸார்..." உதவியாளர் நகர்ந்து போனதும் ராஜவர்மா தன்னுடைய செல்போனை எடுத்து சில்பா நம்பியாரின் செல் எண்களைத் தொடர்பு கொண்டார். உடனே ஆங்கிலத்தில் ரிக்கார்டட் வாய்ஸ் கேட்டது. "தற்சமயம் இந்த சந்தாதாரரை நீங்கள் தொடர்பு கொள்ள முடியாது."

ராஜவர்மா முகம் இறுகினார். மேடைக்கு முன்புறம் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த சில்பா நம்பியாரின் கோச் கேசவ மேனன் பார்வைக்குக் கிடைக்க, அவருடைய செல் போனுக்குத் தொடர்பு கொண்டார் ராஜவர்மா மெதுவான குரலில் பேசினார்.

"மேனன்...! நான் ராஜவர்மா..."

"சொல்லுங்கள் ஸார்..."

"இந்த அரங்கிற்கு சில்பா நம்பியாரைத் தவிர மற்ற வீரர்களும் வீராங்கனைகளும் வந்து விட்டார்கள். அவள் ஏன் வரவில்லை."

"தெரியவில்லையே ஸார்... அவளுடைய செல்போனை தொடர்பு கொண்டீர்களா...?"

"தொடர்பு கொண்டேன். செல்போனை ஆஃப் செய்து வைத்து இருக்கிறாள். இந்த அரங்கம் முழுவதும் அவளுடைய



வருகையைத்தான் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறது. நேரத்துக்கு வந்து இருக்க வேண்டாமோ... என்ன பெண்...?

"ஸார்...! சில்பா நம்பியார் இப்போது எங்கே இருப்பாள் என்று எனக்குத் தெரியும்... நான் ஒரு செல்போன் நம்பரைத் தருகிறேன்... அந்த நம்பர்க்கு போன் செய்து பாருங்கள்..."

"நம்பர் சொல்லுங்கள்."

கேசவமேனன் நம்பர் சொல்ல .அதை ஒரு தாளில் குறித்துக் கொண்ட ராஜவர்மா கேட்டார்.

"இது யாருடைய நம்பர்...?"

"முரளிதரன்."

"யார் அந்த முரளிதரன்...?"

"சில்பாவின் நாளைய கணவன். இன்றைய காதலன்."

"ஓ...! சில்பாவுக்கு காதல் விவகாரம் கூட உண்டா...?"

"கடந்த ஆறு மாதமாய்த்தான் இந்தக் காதல். ஒலிம்பிக் போட்டிகள் முடிந்ததும் எல்லோரிடமும் சொல்லிக் கொள்ளலா மென்று இப்போதைக்கு ரகசியமாய் வைத்து இருக்கிறாள்..."

"அப்படியென்றால்... நான் முரளிதரனின் செல்போனுக்கு தொடர்பு கொண்டு பேசுவது சரியாய் இருக்காது. நீங்களே பேசி விடுங்கள் மேனன்...! இன்னும் பதினைந்து நிமிட நேரத்துக்குள் சில்பா நம்பியார் இந்த அரங்கில் இருக்க வேண்டும்..."

"நீங்கள் கவலைப்படாதீர்கள் ஸார்... நான் இப்போதே முரளிதரனின் செல்போன் மூலமாய் சில்பாவிடம் பேசி விடுகிறேன்" சொன்ன கேசவமேனன் ராஜவர்மாவின் இணைப்பைத் துண்டித்துக் கொண்டு முரளிதரனின் செல் நம்பரை டயல் செய்தார்.

மறுமுனையில் ரிங் போயிற்று.

குரல் கேட்டது.

"முரளிதரன் ஸ்பீக்கிங்..."

"முரளிதரன்...! நான் கேசவமேனன் பேசுகிறேன்."

"என்ன விஷயம் ஸார்...?"

"சில்பா அங்கே இருக்கிறாளா?"

"ஆமாம்... ஸார்."

"அவளைப் பேசச் சொல்."

ஐந்து விநாடிகளுக்குப் பிறகு சில்பாவின் குரல் கேட்டது. "குட்மார்னிங் ஸார்..."

"சில்பா...! நீ இப்போ எங்கே இருக்கே?"

"ஹோட்டல் க்ரீன்வேஸ் ரூஃப் கார்டன் ரெஸ்டாரெண்ட்டில் முரளிதரனோடு மார்னிங் பிரேக்பாஸ்ட் சாப்பிட்டுகிட்டிருக்கேன்."

"இப்ப மணி என்ன தெரியுமா?"

"பத்து... ஸார்."

"இன்னிக்கு ஒலிம்பிக் பிரஸ்மீட் இருக்கிறது உனக்குத் தெரியுமா தெரியாதா...?"

"தெரியும்... ஸார்..."

"ஏன் வரலை..?"

"ஃபங்க்ஷன் பத்தரை மணிக்குத்தானே?"

"இருந்தாலும் முன்கூட்டியே நீ வரவேண்டாமா? இங்கே உன்னைத் தவிர எல்லாரும் இருக்காங்க..."

"பத்தரை மணிக்கு வந்தா போதும்ன்னு நினைச்சேன்..."

"சரி... நீ உடனே புறப்பட்டு வா... ஃபங்க்ஷன் இங்கே 'கமென்ஸ்' ஆகி போய்கிட்டிருக்கு... எல்லாரும் உனக்காக வெயிட் பண்ணிட்டிருக்காங்க..."



"இதோ... புறப்படறேன் ஸார்..."

"இப்போ மணி 10.05 இன்னும் பதினஞ்சு நிமிஷத்துக்குள்ளே நீ இந்த அரங்குக்குள்ளே இருக்கணும்."

"இருப்பேன்... ஸார்..."

"லேட் பண்ணிடாதே... ஒலிம்பிக் சங்கத் தலைவர் ராஜவர்மா உன்மேல ரொம்பவும் கோபத்துல இருக்கார்..."

சில்பா சிரித்தாள்.

"என்னைப் பார்த்ததுமே அவரோட கோபம் போயிடும்."

கேசவமேனன் செல்போனை அணைத்துவிட்டு மேடையில் இருந்த ராஜவர்மாவுக்கு தகவல் கொடுத்துவிட்டு காத்திருந்தார்.

நேரம் 10.10.

10.15.

10.20

சில்பா வரவில்லை.

10.25.

கேசவ மேனன் மறுபடியும் சில்பாவின் செல்போனுக்கும் முரளிதரனின் செல்போனுக்கும் டயல் செய்து பார்த்தார். 'தற்சமயம் சந்தாதாரரைத் தொடர்பு கொள்ள முடியாது' = என்கிற ரிக்கார்டட் வாய்ஸ் கேட்டது.

நேரம் 10.30.

10.35.

10.40.

11.00

சில்பா -

வரவில்லை.

ஃபங்க்ஷன் 11.30க்கு முடிந்து எல்லோரும் அரங்கை விட்டு வெளியேற - ராஜவர்மா கோபத்தில் முகம் சிவக்க கேசவ மேனனிடம் வந்தார்.

''என்ன மேனன்...! சில்பா இப்படி செய்து விட்டாளே...?''

''பதினைந்து நிமிஷத்தில் வருகிறேன் என்று சொன்னவள் ஏன் வரவில்லை...?''

''அதுதான் எனக்கும் புரியவில்லை...''

''ஒலிம்பிக்கில் வெற்றி பெறப் போகிறோம் என்ற ஆணவத்தில் அவளுக்கும் திமிர் ஏறிவிட்டது...''

''நல்ல பெண் ஸார்... என்ன காரணத்தினாலோ அவளால் வர முடியாமல் போய்விட்டது.''

''என்ன... நல்ல பெண்...? லட்சக்கணக்கான ரூபாயை செலவு பண்ணி அவளை ஒலிம்பிக்கிற்கு தயார் பண்ணி வைத்து இருக்கிறோம். அவள் என்னடாவென்றால் ப்ரஸ் மீட் இருப்பதையும் மறந்து காதலனோடு கூத்தடிக்க ஹோட்டலுக்குப் போய் விட்டாள். நாளைக்கு பேப்பரில் என்ன செய்தி வரப்போகிறது தெரியுமா...

**''ஒலிம்பிக் - பத்திரிகையாளர்கள் கூட்டத்தை சில்பா புறக்கணித்தார்.''**

ராஜவர்மா கோபமாய் பேசிக் கொண்டிருக்கும்போதே அரங்கத்தின் நுழைவு வாசலில் -

அந்த போலீஸ் ஜீப் வேகமாய் வந்து நின்றது.




**டா**யலட் வாசலில் விவேக்கைப் பார்த்ததுமே ரோஸ்கலர் டீ ஷர்ட் பேர்வழி,



தன் வலது பூட்ஸ் காலை குபீரென்று உயர்த்தி, விவேக்கை உதைக்க முயல - விவேக் ஒரு மைக்ரோ விநாடி விலகி, கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அவன் மேல் பாய்ந்தான்.

டீ ஷர்ட் பேர்வழி சுதாரிப்பதற்குள் - அவனுடைய மூக்கு விவேக்கின் வலது முஷ்டியால் நொறுக்கப்பட்டு ரத்தத்தைக் கொட்டியது. விவேக்கின் இடது முஷ்டி அவனுடைய அடி வயிற்றில் கிட்னி இருந்த பகுதியைத் தாக்க அப்படியே வாஷ் பேசினுக்கு கீழே மடங்கி விழுந்தான்.

விவேக் அவனுடைய வயிற்றின் மேல் காலை வைத்துக் கொண்டு தன் செல்போனை எடுத்து சில எண்களைத் தட்டி விட்டுப் பேசினான். போலீஸ் கண்ட்ரோல் ரூமுக்கு தகவல் கொடுத்துவிட்டு விஷ்ணுவின் அருகே வந்து மண்டியிட்டு உட்கார்ந்து அவனுடைய கன்னத்தைத் தட்டினான்.

''விஷ்ணு...''

மெல்ல கண்விழித்த விஷ்ணு தன்னுடைய நெற்றியை இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

''பா... பா... பாஸ்.''

''உனக்கு என்னடா பண்ணுது..?''

''க... கண்ணுல... இ... இன்னும் பூச்சி பறக்குது பாஸ். இடி அமீன் மாதிரி என்னா அடி...? என்னோட உடம்புக்குள்ளே ஒரு பிரளயமே நடந்துடுச்சு பாஸ்... அவன்... எங்கே பாஸ்... உங்களைப் பார்த்ததும் ஓடிட்டானா...?''

''கொஞ்சம் திரும்பி வாஷ்பேசினுக்குக் கீழே பாரு.''

விஷ்ணு பார்த்துவிட்டு ரத்தம் கசியும் உதட்டோடு விசில் அடித்தான். ''கவுந்துட்டானா...? பாஸ்ன்னா பாஸ்தான்... ஆளைப் பார்த்தீர்களா பாஸ்... காட்டெருமைக்கு பேண்ட்டும் ஷர்ட்டும் மாட்டிவிட்ட மாதிரி இருக்கு...''

''கண்ட்ரோல் ரூமுக்குத் தகவல் கொடுத்தாச்சு... போலீஸ் இப்ப வந்துடுவாங்க... இவனை வெளியே இழுத்துப் போடு.''

''பாஸ்...! ஒரு நிமிஷம்... இவ்னோட பேண்ட்டையும் சர்ட்டையும் செக் பண்ணிப் பார்த்துடறேன்.''

விஷ்ணு சொல்லிக் கொண்டே அவனுடைய பேண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து தேடினான்.

ஒரு சின்ன பளபளப்பான அட்டைப் பெட்டி கிடைத்தது. விஷ்ணு திறந்து பார்த்துவிட்டு விவேக்கை ஏறிட்டு மெல்ல புன்னகைத்தான்.

''என்னடா சிரிக்கிறே...?''

''பாஸ்...! இவன் மன்மதராசா...! பாக்கெட்ல என்ன தெரியுமா...?''

''சொல்லு...''

''புள்ளிராஜாவுக்கு எய்ட்ஸ் வருமா?''

''காண்டம்...?''

''அதே... அதே...''

''அது மட்டும் இருக்கா... இல்ல வேற ஏதாவது இருக்கான்னு பாரு...''

விஷ்ணு விழுந்து கிடந்தவனின் பாக்கெட்டுகளை துழாவினான். இரண்டாவது பாக்கெட்டில் கைக்கு கடினமாய் வட்டமாய் எதுவோ தட்டுப்பட்டது.

வெளியே எடுத்தான்.

கண்களுக்குள் வியப்பு சுழன்றது.

''பா... பாஸ்...''

''என்னடா...?''



''தங்கக் காசு பாஸ்.''

''என்னது! தங்கக்காசா..? கொண்டா பார்க்கலாம்...''

விவேக் வாங்கிப் பார்த்துவிட்டு விசில் அடித்தான். ''மை குட்னஸ்...!''

''என்ன பாஸ்...?''

''இது தங்கக் காசு இல்லடா விஷ்ணு... தங்கப் பதக்கம். அதுவும் சாதாரண தங்கப் பதக்கம் கிடையாது...''

''பின்னே?''

''ஒலிம்பிக் தங்கப் பதக்கம்...''

''என்ன பாஸ்... சொல்றீங்க?''

''பார்ரா...'' விவேக் நீட்டிய தங்கப் பதக்கத்தை விஷ்ணு வாங்கி உற்றுப் பார்த்தான்.

**1980 மாஸ்கோ ஒலிம்பிக்ஸ்** என்ற வார்த்தைகள் அந்தப் பதக்கத்தில் என்க்ரேவ் செய்யப்பட்டிருந்தன.

''என்ன பாஸ்... இவன்கிட்டே ஒலிம்பிக் தங்கப் பதக்கம் இருக்கு... இவன் ஒலிம்பிக் அத்லெடிக்கா...?''

''ஏன்... திருடனாய் இருக்கக் கூடாதா?''

விவேக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே செல்போன் அழைத்தது. எடுத்து காதுக்குப் பொருத்தினான்.

மறுமுனையில் சி.பி.ஐ. ரைக்டர் மனோரஞ்சன் பேசினார். ''மிஸ்டர் விவேக்... நீங்க இப்போ எங்கே இருக்கீங்க...?''

''நீங்க சொன்ன ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டாரெண்ட்ல.''

''ஓ.கே...! இப்ப நீங்க போக வேண்டிய இடம் எதுன்னு சொல்றேன். ப்ளீஸ் ஹியர் கேர்ஃபுலி...''

''சொல்லுங்க ஸார்...''

"இப்ப நீங்க இருக்கிற இடத்திலிருந்து சரியா ஐந்து கிலோ மீட்டர் பயண தூரம். அம்மாசிக் குப்பம் என்கிற ஒரு இடம் வரும்."

"தெரியும் ஸார்... போர்டு பார்த்திருக்கேன்."

"அந்த போர்டுக்கு வலது புறமாய் ஒரு சவுக்குத் தோப்பு இருக்கும் அந்த தோப்புக்குள்ளே போனா ஒரு பழைய பங்களா பார்வைக்குக் கிடைக்கும். அங்கே உங்களை எதிர்பார்த்து ஒருத்தர் வெயிட் பண்ணிட்டிருப்பார்."

"அவர் யார் ஸார்...?"

"ஸாரி மிஸ்டர் விவேக்... செல்போனில் சில விஷயங்களை பகிரங்கமாய் சொல்லக்கூடாது என்பது என்னுடைய மேலதிகாரிகள் எனக்கிட்ட கட்டளை. அதேபோல் செல்போனில் ஒரே தடவையில் எல்லா விஷயங்களையும் சொல்லி விடக்கூடாது என்பதும் ஒரு கட்டளை. அதனால்தான் முதல் தடவை உங்களுக்குப் போன் செய்தபோதே நான் எல்லா விஷயங்களையும் சொல்லவில்லை."

"ஸார்..."

"சொல்லுங்கள்..."

"சவுக்குத் தோப்புக்குள் கார் போக பாதை இருக்கா...?"

"மண்பாதை இருக்கு... கொஞ்சம் சிரமப்பட்டு காரை ஓட்ட வேண்டியிருக்கும்..."

"ஸார்... உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். உங்களுடைய செல்போன் அழைப்புக்காக நானும் விஷ்ணுவும் ஃபாஸ்ட் ஃபுட் ரெண்டாரண்ட் வாசலில் காத்து இருந்த போது ரெஸ்டாரெண்ட்டுக்குள் இருந்த ஒருவன் எங்களைப் பார்த்ததுமே மெல்ல நழுவி ரெஸ்டாரெண்ட்டுக்கு பின்புறம் இருந்த டாய்லட்டுக்குள் போய் நுழைந்து கொண்டான்."



"யா... யார் அவன்...?"

"தெரியவில்லை..."

"மடக்கி விட்டீர்களா...?"

"மடக்கிவிட்டோம்... எங்களை அவன் தாக்க முயன்றான். பதிலுக்கு நாங்களும் தாக்கியதில் ஆள் இப்போது மயக்க நிலைமையில் இருக்கிறான். கண்ட்ரோல் ரூமுக்குத் தகவல் கொடுத்து விட்டோம். போலீஸ் வந்து கொண்டிருக்கிறார்கள்... அந்த பேர்வழியை சோதித்துப் பார்த்ததில் ஒரு பிரமிப்பான விஷயம் கிடைத்தது ஸார்."

"என்ன...?"

"1980-ல் மாஸ்கோவில் ஒலிம்பிக் போட்டிகள் நடந்த போது வழங்கப்பட்ட ஒரு தங்கப் பதக்கம் அவனுடைய பேண்ட் பாக்கெட்டில் இருந்தது."

"என்னது! ஒலிம்பிக் தங்கப் பதக்கமா?"

"ஆமாம் ஸார்..!"

"விவேக்...! நீங்களும் விஷ்ணுவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய நிமிஷங்கள் ஆரம்பமாகிவிட்டது."

"ஸார்...! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?"

"நீங்களும் நானும் செல்போனில் பேசுவதை யாரோ ஒட்டுக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன்... நீங்கள் உடனடியாய் அம்மாசிக் குப்பம் சவுக்குத் தோப்புக்குப் போய் அங்கே பங்களாவில் இருக்கும் நபரைச் சந்தியுங்கள். உங்கள் குழப்பங்களுக்கு அங்கே தெளிவு கிடைக்கும்."

"எஸ்... ஸார்..."

விவேக் செல்போனை அணைத்த விநாடி விஷ்ணு கூப்பிட்டான்.

"பாஸ்... இங்கே கொஞ்சம் வாங்க..."

''என்னடா...?''

''கீழே விழுந்து கிடக்கிறவனோடு முகத்தைக் கொஞ்சம் உத்துப் பாருங்க...''

''ஏன்... பழக்கப்பட்ட முகமாய் தெரியுதா...?''

''அது இல்ல பாஸ்... நீங்க ஒரு நிமிஷம் உத்துப் பாருங்க... உங்களுக்கே தெரியும்...''

விவேக் உற்றுப் பார்த்தான். ''அட!'' என்றான்.




**போ**லீஸ் ஜீப்பைப் பார்த்ததுமே ராஜவர்மாவும், கேசவமேனனும் குழப்ப முகங்களோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டு வாசலை நோக்கிப் போனார்கள்.

பிரசன்னகுமார் என்று 'நேம் பேட்ச்' குத்திய இன்ஸ்பெக்டர் தொப்பியைக் கழற்றி கக்கத்தில் வைத்துக் கொண்டு அவர்களை நெருங்கினார்.

''மிஸ்டர் ராஜவர்மா...?''

''மை செல்ஃப்...''

''மிஸ்டர் கேசவமேனன்...?''

''நான்தான்...''

''நீங்கள் இருவரும் உடனே புறப்பட்டு ஜேஸ்மின் ஹாஸ்பிட்டலுக்கு வர முடியுமா...?''

''ஹாஸ்பிட்டலுக்கா... எதற்கு...?''

''முரளிதரன் என்பவர் உடம்பில் படுகாயங்களோடு அந்த ஹாஸ்பிட்டலில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். ஒரு மணி நேரத்துக்கு முன்பு ஹைவேஸ் ரோட்டின் ஓரத்தில் சுய



நினைவு இல்லாமல் கிடந்த அவரை யாரோ சிலர் ஹாஸ்பிட்டலில் சேர்த்துவிட்டு போலீஸுக்குத் தகவல் கொடுத்தார்கள். நான் உடனே புறப்பட்டு ஹாஸ்பிட்டலுக்குப் போனேன். நான் போன சிறிது நேரத்துக்குள்ளாகவே அவர்க்கு சுயநினைவு வந்து பேசினார். அவரும், அவருடைய காதலி சில்பாவும் ஹோட்டல் க்ரீன்வேஸிலிருந்து புறப்பட்டு காரில் 'பிரஸ் மீட்'டுக்கு வந்து கொண்டிருந்தபோது வழியில் இரண்டு பேர் காரை நிறுத்தி முரளிதரனை வெளியே இழுத்துப் போட்டு கத்தியால் குத்தியும் தடியால் அடித்தும் படுகாயப்படுத்தியுள்ளார்கள். அவர் இறந்து விட்டதாக நினைத்து சில்பாவை காரோடு கடத்திக் கொண்டு போய் விட்டார்கள்.''

கேசவமேனன் பதட்டமானார்.

''முரளிதரனின் உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லையே...?''

''அவருடைய உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லை. ஆனால் ரத்த சேதம் அதிகம். இதுவரைக்கும் இரண்டு யூனிட் ரத்தம் கொடுக்கப்பட்டுள்ளது... 'ராஜவர்மாவிடமும், கேசவமேனனிடமும் நான் பேச வேண்டும்' என்று அவர் சொன்னதால் உடனே உங்களைப் பார்க்க வந்தேன். புறப்படலாமா...?''

மூன்று பேரும் புறப்பட்டார்கள்.

ஜீப்பில் போகும்போது ராஜவர்மா கவலையான குரலில் கேட்டார். ''சில்பாவை கடத்திக் கொண்டு போனவர்கள் யார் என்று தெரிந்ததா இன்ஸ்பெக்டர்...?''

''அவர்கள் யார் என்பதை முரளிதரனால் சொல்ல முடியவில்லை. அவரைக் கண் மூடித்தனமாய் தாக்கிய இரண்டு பேரும் முகங்களை கறுப்புத் துணியால் மூடியிருந்ததாக முரளிதரன் சொன்னார். சில்பாவைக் கடத்திக் கொண்டு போனவர்களைக் கண்டு பிடிக்க இரண்டு சிறப்புப் போலீஸ் படை அமைக்கப்பட்டுள்ளது. தமிழக எல்லையை அவர்கள்

தாண்ட முடியாதபடிக்கு எல்லா செக் போஸ்ட்டுகளையும் சீல் வைத்துள்ளோம். எப்படியும் இன்று மாலைக்குள் கடத்தல் பேர்வழிகளைக் கண்டு பிடித்து விடுவோம்...''

ஜீப் வேகம் எடுத்து ஜேஸ்மின் ஹாஸ்பிட்டலை நோக்கிப் போயிற்று. இரண்டு நிமிஷங்கள் மௌனமாய் வந்த இன்ஸ்பெக்டர் பிரசன்னகுமார் ராஜவர்மாவிடம் கேட்டார்.

''சில்பாவை யார் கடத்தியிருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?''

ராஜவர்மா மெல்ல தலையை ஆட்டி தோள்களைக் குலுக்கினார்.

''இந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது இன்ஸ்பெக்டர். காரணம் சில்பா ஒரு நல்ல பெண். அவளுக்கு எதிரிகளே இருக்க முடியாது என்பதுதான் உண்மை...'

''ஸாரி மிஸ்டர் ராஜவர்மா... பொதுவாக நல்லவர்களுக்குத்தான் எதிரிகள் அதிகமாக இருப்பார்கள். எனக்கு ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளப் போகும் வீரர், வீராங்கனைகளின் பட்டியல் வேண்டும்.

''எதற்கு...?''

''வீரர், வீராங்கனைகளின் கடந்த கால ஃப்ளாஷ்பேக்கை கொஞ்சம் கிளறிப் பார்த்தால் ஏதாவது தகவல் கிடைக்கலாம்.''

ஜேஸ்மின் ஹாஸ்பிட்டல் வந்தது. ஜீப்பை ஃபோர் வீலர்ஸ் பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு மூன்று பேரும் உள்ளே போனார்கள். ஐ.ஸி. யூனிட் இருந்த இரண்டாவது மாடியில் முதல் அறை.

உடம்பின் எழுபது சதவீத பரபரப்பு பாண்டேஜ் கட்டோடு தெரிய முரளிதரன் உயர்த்திப் போட்ட கட்டிலில் கண் மூடித் தெரிந்தான். நர்ஸ் ஒருத்தி ட்யூப் வழியாக பயணிக்கும் ரத்தத்தையும் குளூகோஸையும் சரி பார்த்துக் கொண்டிருந்தாள்.



இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''என்ன சிஸ்டர்... முரளிதரனுக்கு கான்ஷியஸ் இருக்கா... இல்ல மறுபடியும் போயிருச்சா...?''

''கான்ஷியஸ் இருக்கு ஸார்... ரெண்டு நிமிஷத்துக்கு முன்னாடி கூட கண் விழிச்சுப் பார்த்தார்.'' சொன்ன நர்ஸ் முரளிதரனுக்குப் பக்கத்தில் போய் நின்று குரல் கொடுத்தாள்.

''முரளிதரன்...''

''ம்...''

முரளிதரனின் கண்கள் மெல்ல பிரிந்தன.

இன்ஸ்பெக்டர், ராஜவர்மா, கேசவமேனன் மூன்று பேரும் அவனுடைய பார்வையில் படும்படியாக பக்கத்தில் போய் நின்று கொண்டார்கள்.

முரளிதரனுக்கு ராஜவர்மாவையும் கேசவ மேனனையும் பார்த்ததும் உதடுகள் துடித்தது. தொண்டையிலிருந்து ஒரு விம்மல் புறப்பட - கண்களில் நீர் கட்டியது. குரல் குழறியது.

''ஸ... ஸார்...! நானும் சில்பாவும் ஒலிம்பிக் ப்ரஸ் மீட்டில்... கலந்துக்கிறதுக்காக... புறப்பட்டு வந்துட்டிருக்கோம்... வழியில்... யாரோ... ரெண்டு பேர்...''

ராஜவர்மா கையமர்த்தினார். ''நீங்க சிரமப்பட்டு எதையும் சொல்ல வேண்டாம் முரளிதரன்... இன்ஸ்பெக்டரே எல்லாத்தையும் சொல்லிட்டார்.''

''ஸார்... அந்த ரெண்டு பேரும் முகத்துக்கு கறுப்பு துணி கட்டியிருந்தாங்க. ஒருத்தன் உயரமாகவும் இன்னொருத்தன் குண்டாகவும் இருந்தான். என்னை வெளியே இழுத்துப் போட்டு கத்தியால சரமாரியா குத்தி...''

இன்ஸ்பெக்டரின் செல்போன் ஒலித்தது. அவர் அறையின் மூலைக்குப் போய் செல்போனை எடுத்து காதுக்குப் பொருத்தி மெல்லிய குரலில் பேசினார்.

''யாரு...?''

''இன்ஸ்பெக்டர்...! இந்த ஹாஸ்பிடலோட புகார் பெட்டியில் முரளிதரனின் பெயரில் ஒரு கடிதம் இருக்கிறது. எடுத்துப் படியுங்கள்...''

இன்ஸ்பெக்டர் மேற்கொண்டு பேசும் முன்பு செல்போனின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விட, அவர் அறையினின்றும் வேகமாய் வெளிப்பட்டு ரிசப்ஸன் நோக்கிப் போனார். கௌண்ட்டரில் இருந்த ரிசப்ஷனிஸ்டிடம் கேட்டார்.

''இங்கே புகார் பெட்டி எங்கே இருக்கிறது?''

கௌண்ட்டர்க்கு இடது பக்கம் வைக்கப்பட்டிருந்த அந்தப் பெட்டியைக் காட்டினாள் ரிசப்ஷனிஸ்ட்.

''அந்தப் பெட்டியின் சாவி யாரிடம் இருக்கிறது?''

''என்னிடம்...''

''திறங்கள்.''

அவள் தயங்கினாள். ''டாக்டரின் அனுமதி இல்லாமல்...''

''டாக்டரிடம் நான் சொல்லிக் கொள்கிறேன்... முதலில் சாவியைக் கொடுங்கள்...''

அவருடைய பதட்டத்தையும், அவசரத்தையும் உணர்ந்த ரிசப்ஷனிஸ்ட் சாவியை எடுத்துக் கொடுக்க, இன்ஸ்பெக்டர் பிரசன்னகுமார் அதை வாங்கிக் கொண்டு புகார் பெட்டியை நோக்கிப் போனார்.

பெட்டியின் பூட்டுக்கு தன் கையிலிருந்த சாவியால் விடுதலை கொடுத்தவர் அதன் சிறிய கதவைத் திறந்தார்.

உள்ளே -

பதினைந்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் தெரிய, அதை கொத்தாக அள்ளி பக்கத்தில் இருந்த மேஜையின் மேல் பரப்பினார். முரளிதரனின் பெயர் இருந்த கடிதங்களைத் தேடினார்.



கிடைத்தது.

கவரின் வாயைத் திறந்தார். உள்ளே டிஷ்யூ பேப்பரில் பிரிண்ட் அவுட் செய்யப்பட்ட ஒரு கடிதம். ஆர்வமாய் படிக்க முயன்றவரின் முகம் மாறியது.

கடித வரிகள் வேறு ஏதோ மொழியில் இருந்தது.

''இது என்ன மொழி...?''

பிரசன்னகுமார் உற்றுப் பார்த்தார். மொழி பிடிபடவில்லை. கடிதத்தின் பின்பக்கத்தைப் புரட்டிப் பார்த்தார்.

ஒரு ஓவியம் தெரிந்தது.

தோள்பட்டையில் இறக்கைகள் முளைத்த ஒரு பெண் தேவதையின் படம்.

''என்ன இன்ஸ்பெக்டர்... ஏதாவது பிரச்னையா? செல் போனில் பேசிவிட்டு அவசர அவசரமாய் வெளியே வந்தீர்கள். என்ன விஷயம்...?''

இன்ஸ்பெக்டர் விஷயத்தைச் சொல்லி தன் கையில் வைத்து இருந்த கடிதத்தை ராஜவர்மாவிடம் நீட்டினார். அவர் அதை வாங்கிப் பார்த்துவிட்டு சொன்னார்.

''இன்ஸ்பெக்டர்...! இது கிரேக்க மொழி. கடிதத்தின் பின்புறம் இருக்கிற தேவதை கிரேக்கர்களின் புனித தேவதை படம். இந்த தேவதையின் பெயர் நைக். ஒலிம்பிக் பதக்கங்களில் இந்த தேவதையின் உருவம்தான் பதிக்கப்பட்டிருக்கும்.''




**வி**வேக் 'அட!' என்று வியந்து கொண்டே கீழே விழுந்து கிடந்தவனின் முகத்தில் கை வைத்து, காதோரமாய் விரல்களைக் கொண்டு போய் சதைப்பரப்போடு இணைந்து

இருந்த தலைமுடி விக்கை மெல்லத் தூக்கி இழுத்தான். சிறிது நேர சிரமத்துக்குப் பிறகு அது கையோடு கழன்று வந்தது.

உள்ளே -

ஒரு பெண்ணின் முகம். வெளிநாட்டு முகம்.

''பாஸ்...! இவ டூ இன் ஒன் கேஸ்... அர்த்தநாரீஸ்வரர்...''

டாய்லெட்டுக்கு வெளியே பூட்ஸ் சத்தம் கேட்டது. இன்ஸ்பெக்டர் செல்வராஜும், சப்-இன்ஸ்பெக்டர் ரவியும் உள்ளே வந்தார்கள். விவேக்கைப் பார்த்து சல்யூட் அடித்து விட்டு தளர்ந்தார்கள். விவேக் அவர்களுக்கு விபரம் சொல்லி விட்டு எச்சரித்தான்.

''இந்தப் பெண்ணை ஜி.ஹெச்சில் அட்மிட் செய்துவிட்டு கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். பத்திரிகைகளுக்கு இப்போதே நியூஸ் கொடுத்து விட வேண்டாம்... ஆம்புலன்ஸ் கொண்டு வந்திருக்கிறீர்களா?''

''கொண்டு வந்திருக்கிறோம் ஸார்.''

''முதலில் இவளை ஜி.எச். கொண்டு போய் ட்ரீட்மெண்ட் கொடுங்கள்... நான் இரண்டு மணி நேரத்துக்குள் ஜி.ஹெச். வந்துவிடுகிறேன்.''

''எஸ்... ஸார்...''

விவேக்கும் விஷ்ணுவும் டாய்லட்டை விட்டு வெளியே வந்து காரை நோக்கி நடக்க - ரெஸ்டாரெண்ட்டின் உரிமை யாளர் கலவர முகத்தோடு பக்கத்தில் வந்தார்.

''ஸார்... என்ன பிரச்னை...?''

''ஒரு பிரச்னையும் கிடையாது... இதுநாள் வரைக்கும் சட்டத்துக்கு டிமிக்கிக் கொடுத்த ஒரு க்ரிமினலை போலீஸ் மடக்கியிருக்காங்க... அவ்வளவுதான்... நீங்க போய் கஸ்ட மர்களை கவனிங்க.''



ரெஸ்டாரெண்ட் உரிமையாளர் கவலையோடு நின்று கொண்டு பார்க்க விவேக்கும் விஷ்ணுவும் காருக்குள் நுழைந் தார்கள்.

விவேக் காரை விரட்ட விஷ்ணு ''பாஸ்'' என்றான்.

''சொல்லு...''

''ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வெச்சிருக்கிற ஒரு பொண்ணு எதுக்காக ஒரு ஆண் மாதிரியான கெட்டப்பில் இந்த ரெஸ்டா ரெண்ட்டுக்கு வரணும்...? நம்ம காரைப் பார்த்ததும் டாய்லட்டுக்குள் ஏன் ஓடி ஒளியணும்...?''

விவேக் விஷ்ணுவை ஒரு அரைப் புன்னகையோடு பார்த்தான். ''டேய்... விஷ்ணு! அந்தப் பெண்ணோட உட லமைப்பைப் பார்த்தியா...?''

''பார்த்தேன் பாஸ்... ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய பெண்மைகள் அவகிட்ட இல்லை. ரெண்டு காலும் கையும் உலக்கை மாதிரி இருக்கு... எனக்கு விழுந்த அடியில பொறி கலங்கிட்டேன் பாஸ். அவளுக்கும் நமக்கும் என்ன பகை பாஸ்?''

''கண்டு பிடிச்சிடலாம்...! அவளுக்கு மொதல்ல மயக்கம் தெளியட்டும்...''

அம்மாசிக் குப்பம் வந்தது.

விவேக் காரின் வேகத்தைக் குறைத்து ரோட்டுக்கு எதிரில் இருந்த சவுக்குத் தோப்பைப் பார்த்தான். வெறிச்சோடிய சாலைக்கு அப்பால் இருட்டான நிசப்தமான அடர்த்தியான தோப்பு. தோப்பை உற்றுப் பார்த்ததில் ஒரு மண் பாதை கோணல் மாணலாய் வேண்டா வெறுப்பாய் வளைந்து போயிற்று.

விவேக் தோப்புக்குள் காரை விரட்டினான்.

வளைவுகளில் கார் திணறியது. சூரிய வெளிச்சம் புக முடியாமல் இருட்டடித்துப் போயிருந்த இடங்களில் ஹெட் லைட்டுகளை உபயோகப்படுத்தினான் விவேக்.

''பாஸ்...'' விஷ்ணுவின் குரலில் குளிர்.

''என்னடா...?''

''இது மாதிரியான இடங்களுக்கு வர்றதுக்கு முன்னாடி எனக்கு ஒரு முன் அறிவிப்பு கொடுத்துடுங்க பாஸ்...''

''எதுக்குடா...?''

''ஒரு நல்ல தொகைக்கு என்னை இன்சூர் பண்ணிக்கத் தான்...! இப்படி ஒரு இருட்டான தோப்பை நான் பார்த்ததே இல்லை பாஸ்... அடி வயித்துக்குள்ளே பயம் மண்ணெண் ணெய் தீர்ந்து போன லாந்தர் விளக்கு மாதிரி 'பக் பக்'ன்னு அடிக்குது... ஒரு பத்து பேர் துப்பாக்கியும் கையுமா காரை வழி மறிச்சா நீங்க என்ன பண்ணுவீங்க பாஸ்?''

''எத்தனை தமிழ் படம் பார்த்திருக்கோம்...? விக்ரம் மாதிரி, விஜய்காந்த் மாதிரி... மரத்துக்கு மரம் தாவி அடிக்க வேண்டியதுதான். மரத்துக்கு மரம் தாவும்போது 8 மாதிரி குட்டிக்கரணம் போட்டா எதிரிகள் ஏ.கே.47-ல் சுட்டாலும் தோட்டா நம்ம மேல பாயாது. உனக்கு மரத்துக்கு மரம் தாவும் போது 8 போடத் தெரியுமா?''

''பேப்பர்ல 8 போடவே எனக்குத் தெரியாது பாஸ். சின்ன வயசுல கணக்கு வாத்தியார்கிட்டே பின் மண்டையில் நிறைய குட்டு வாங்கியிருக்கேன்... இங்கே தொட்டுப் பாருங்க பாஸ் நிரந்தரமா... ஒரு புடைப்பு இருக்கும்...''

விஷ்ணு சொல்லிக் கொண்டிருக்கும்போதே -

கார் திடும்மென்று நின்றது.

எதிரில் துப்பாக்கியும் கையுமாய் இரண்டு பேர் பக்கத்தில் வந்து குனிந்தார்கள்.



''ஸார்...! கார் இதற்கு மேல் போக வழியில்லை. நீங்கள் இங்கே இறங்கி நடக்க வேண்டும்...''

விவேக்கும் விஷ்ணுவும் கீழே இறங்கினார்கள். சவுக்குத் தோப்பு ஒரு அமானுஷ்ய அமைதியில் உறைந்து போயி ருந்தது. யார்க்கோ கட்டுப்பட்ட மாதிரி காற்று மெதுவாய் வீசிக் கொண்டிருக்க சவுக்கு மரங்களின் உச்சியில் இருந்த கிளைகள் மெதுவாய் தலையாட்டின.

துப்பாக்கி வைத்திருந்த பேர்வழிகளில் ஒருவன் சொன் னான். ''ஸார்! எங்கள் பின்னாலேயே நடந்து வாருங்கள். பாதை மாறி நடந்து விடாதீர்கள். புதை குழிகள் இருக்கும்...''

அந்த இரண்டு பேர்களும் முன்னால் நடக்க ஆரம்பிக்க விவேக்கும் விஷ்ணுவும் பின் தொடர்ந்தார்கள்.

'இவர்கள் எங்கே கூட்டிப் போகிறார்கள்?'

'யாரை சந்திக்கப் போகிறோம்?'

'என்ன பேசப் போகிறோம்?'

விவேக் குழப்பங்களோடு நடக்க ஆரம்பித்தான்.

ஒரு பத்து நிமிஷ நடைக்குப்பின் அந்தப் பழமையான பங்களா பார்வைக்குக் கிடைத்தது.




இன்ஸ்பெக்டர் பிரசன்னகுமார் அடையார் இந்திரா நகரில் இருந்த அந்த வீட்டுக்கு முன்பாக போலீஸ் ஜீப்பை நிறுத்தி விட்டு கீழே இறங்க அவரைத் தொடர்ந்து ராஜ வர்மாவும், கேசவமேனனும் இறங் கினார்கள்.

பிரசன்னகுமார் சொன்னார்.

''இந்த வீடுதான் ஸார்...''

''அவர் பேர் என்ன சொன்னீங்க...?''

''பிஸ்வாஸ்...! ஏதென்ஸ் நகரில் இந்திய தூதராய் பல வருஷம் இருந்திருக்கார்...''

வாசலில் இருந்த செக்யூரிட்டியிடம் பிஸ்வாஸைப் பார்க்க வேண்டும் என்று சொல்ல, செக்யூரிட்டி டெலிபோன் மூல மாய் அனுமதி கேட்டுவிட்டு உள்ளே அனுப்பி வைத்தார்.

எழுபது வயது பிஸ்வாஸ் அந்த வயதிலும் சுறுசுறுப்போடு - ஒரு இளைஞனின் ஆர்ப்பரிப்போடு இன்ஸ்பெக்டரை வர வேற்றார். ''வாங்க பிரசன்னகுமார்... என்ன இந்த வேகாத வெய்யிலில் வந்து இருக்கீங்க...''

''உங்களால ஒரு உதவியாகணும் ஸார்.''

''பண்ணிடலாம்... மொதல்ல உட்கார்ங்க...''

மூன்று பேரும் உட்கார்ந்தார்கள். பிரசன்னகுமார் ராஜ வர்மாவையும், கேசவமேனனையும் அறிமுகப்படுத்தி வைத்து விட்டு சில்பா கடத்தப்பட்டதையும், முரளிதரன் தாக்கப் பட்டதையும் சொல்லி முரளிதரனின் பெயர்க்கு வந்த கடி தத்தைக் காட்டினார்.

''ஸார்...! நீங்க ஏதென்ஸில் பல வருஷம் இந்திய தூதராய் இருந்த காரணத்தால உங்களுக்கு கிரேக்க மொழி தெரியும் என்கிற நம்பிக்கையில் இந்தக் கடிதத்தை உங்ககிட்டே கொண்டு வந்திருக்கேன்.''

பிஸ்வாஸ் சிரித்தார். ''உங்க நினைப்பு சரிதான். எனக்கு இப்போ... ஆங்கிலத்தை விட கிரேக்க மொழி நல்லாவே தெரியும். அந்த லெட்டரைக் கொடுங்க...''

வாங்கிப் பார்த்தார். இரண்டு நிமிடம் கழித்து அவர் களிடம் நிமிர்ந்தார்.



''இதனுடைய தமிழாக்கத்தை சொல்லட்டுமா...?''

மூவரும் தலையசைக்க பிஸ்வாஸ் சொல்ல ஆரம்பித்தார்.

**முரளிதரன்!**

**துரதிர்ஷ்டவசமாக நீ உயிர் பிழைத்து விட்டாய். உன்னை ரோட்டோரமாய் இழுத்துப் போட்டபோது உன் உடம்பில் உயிர் இருக்கிறதா என்று பார்த்து இருக்க வேண்டும். அப்படிப் பார்க்காதது நாங்கள் செய்த தவறு. கிரேக்கத்தின் புனித தேவதையான நைக் தேவதை உனக்கு ஆயுளைக் கொடுத்து இருப்பதால் மறுபடியும் நாங்கள் உன்னைக் கொல்ல முயற்சிக்க மாட்டோம். உன்னுடைய இப்போதையக் காதலியும் வருங்கால மனைவியுமான சில்பாவை நாங்கள் கடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கடத்தியிருக்கிறோம். அவளால் எங்களுக்கு ஒரு காரியம் ஆக வேண்டியிருக் கிறது. அந்தக் காரியம் நல்லபடியாய் முடிந்தால் அவளை உயிரோடு உன்னிடம் அனுப்பி வைப்போம். இல்லாவிட்டால் கல்லறைக்கு அனுப்பி வைப்போம். அவள் திரும்பி வருவதும் வராததும் உன்னுடைய அதிர்ஷ்டத்தையும் துரதிர்ஷ்டத்தையும் பொறுத்தது. உன் காதலி உனக்கு உயிரோடு கிடைக்க கிரேக்க புனித தேவதை நைக்கை நினைத்து பிரார்த்தனை செய்.**

பிஸ்வாஸ் சொல்லி முடிக்க - அறைக்குள் அமைதி நிலவியது. ராஜவர்மா கேட்டார்.

''சில்பாவை என்ன காரணத்துக்காக கடத்தியிருக்காங் கன்னு சொல்லலையா...?''

''சொல்லலை...''

பிரசன்னகுமார் ராஜவர்மாவை ஏறிட்டார். ''ஸார்...! ஒலிம்பிக் தடகள போட்டியில் சில்பாவுக்கு தங்கம் வெல்வதற் கான வாய்ப்பு எப்படி...?''

"பிரகாசமான வாய்ப்பு. 100 மீட்டர் தூரத்தை பத்து விநாடிகளுக்குள் கடக்கிற திறமை அவகிட்டே இருந்தது... இந்த தடவை சில்பா மூலம் தடகள போட்டிகளில் மூன்று தங்கம் நிச்சயம் என்பதில் திடமான நம்பிக்கை வைத்து இருந்தோம்... அவள் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளக்கூடாது என்பதற்காக யாரோ திட்டம் போட்டு சில்பாவை கடத்தியிருக்காங்க..."

கேசவமேனன் குறுக்கிட்டார்.

"காரணம் அதுவாக இருக்காது ஸார்."

"பின்னே...?"

"காரணம் இதுதான்..." சொல்ல ஆரம்பித்தார் கேசவமேனன்.




**தூ**ரத்தில் சவுக்கு மரங்களுக்கு நடுவில் அந்த பழைய பங்களா தெரிய - விஷ்ணு, விவேக் காதருகில் கிசுகிசுத்தான்.

"பாஸ்... இடது பக்கம் பாருங்க..."

விவேக் பார்த்தான்.

மரங்களுக்கு மத்தியில் ஒரு கம்யூனிகேஷன் டவர்! சவுக்கு மரம் போலவே அந்த நிறத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது. அதன் உச்சியில் சீசா பச்சை யூனிஃபார்ம் அணிந்த ஒரு நபர் துப்பாக்கியோடும் பைனாகுலரோடும் தெரிந்தான்.

பங்களாவை நெருங்க நெருங்க ஆங்காங்கே துப்பாக்கியோடு நபர்கள் தெரிந்தார்கள்.

பங்களா கேட்டருகே போனதும் உடன் வந்த துப்பாக்கிப் பேர்வழி கழன்று கொள்ள - சபாரி அணிந்த ஒரு வழுக்கைத் தலை மனிதர் உள்ளே கூட்டிப் போனார்.



இரண்டாவது மாடி. முதல் அறை.

சாத்தப்பட்டிருந்த அறைக் கதவைத் திறந்து விட்ட சபாரி "ப்ளீஸ் கெட் இன் ஸார்" என்று சொல்லி விட்டு நகர்ந்து விட விவேக்கும் விஷ்ணுவும் உள்ளே நுழைந்தார்கள்.

அந்தப் பெரிய அறையின் மூலையில் ஒரு மேஜை போடப்பட்டிருக்க, அதன் பின்னால் சி.பி.ஐ. டைரக்டர் மனோரஞ்சன் பெரிய புன்னகையோடு உட்கார்ந்திருந்தார். விவேக்கும், விஷ்ணுவும் அவசர சல்யூட்களைக் கொடுத்தார்கள்.

"ஸ... ஸார்... நீங்களா...?"

மனோரஞ்சன் சிரித்தார்.

"மொதல்ல உட்காருங்க... ப்ளீஸ் ஸீட்டட்."

இருவரும் உட்கார்ந்தார்கள். மனோரஞ்சன் தன்னுடைய இரண்டு கைகளையும் மேஜையில் ஊன்றியபடி பேச ஆரம்பித்தார்.

"மிஸ்டர் விவேக்...! உங்களையும் விஷ்ணுவையும் இப்படி அலைக்கழிக்க வெச்சதுக்காக உங்க ரெண்டு பேர் கிட்டேயும் 'எக்ஸ்க்யூஸ்' கேட்டுக்கிறேன். மொதல்ல இது எந்த இடம்ன்னு சொல்லிடறேன். இது சி.பி.ஐ. ரகசியமாய் நிர்மாணம் செய்திருக்கிற '**N.W.M.**' என்கிற உளவு நிறுவனம். **N.W.M.** என்றால் 'நைட் வாட்ச் மேன்' என்று அர்த்தம். இது போன வாரம்தான் நிறுவப்பட்டது. நிறுவப்பட்டதுக்கு காரணம் ஏதென்ஸில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகள். ஒலிம்பிக் போட்டிகளை நடைபெற விடாமல் சீர்குலைக்கவும், போட்டிகளில் பங்கேற்க வரும் வீரர்களைக் கொலை செய்யவும் உலகத்தில் உள்ள பல்வேறு வகையான தீவிரவாத அமைப்புகள் முயற்சி பண்ணிகிட்டிருக்கு. க்ரீஸ் அரசு ஏதென்ஸில் எந்த விதமான அசம்பாவிதமும் ஏற்பட்டுவிடக்கூடாதுங்கிறதுக்காக ஏதென்ஸில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைப்

பண்ணியிருக்கிற காரணத்தால் தீவிரவாத அமைப்புகளுக்கு சோர்வும் கோபமும் ஏற்பட்டிருக்கு... அந்த கோபத்தின் விளைவு என்ன தெரியுமா மிஸ்டர் விவேக்...?''

''சொல்லுங்க ஸார்...''

''தீவிரவாத அமைப்புகள் தங்களோட நாசகார வேலைகளை ஏதென்ஸில் காட்டறதுக்குப் பதிலாக, ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் நாடுகளுக்கே போய் அந்த வீரர்களைத் தீர்த்துக் கட்ட ஒரு திட்டம் போட்டிருப்பதாக அமெரிக்காவின் உளவு நிறுவனம் எல்லா நாடுகளுக்கும் ரகசியமாய் ஒரு சுற்றறிக் கையை அனுப்பியிருக்கிறது. அதன்படி ஏதென்ஸ் ஒலிம் பிக்கில் கலந்து கொள்வதற்காக புறப்பட்டுப் போகத் தயா ராக இருக்கும் இந்திய வீரர் - வீராங்கனைகளை இந்தியாவி லேயே தீர்த்துக்கட்ட ஒரு தீவிரவாத அமைப்பு இந்தியாவின் முக்கிய நகரங்களில் ஊடுருவியிருப்பதாகத் தகவல். அந்த தீவிரவாத அமைப்பு தங்களிடம் இருக்கிற தொழில் நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி போலீஸ் துறையில் இருக்கிற முக்கிய அதிகாரிகளின் டெலிபோன் பேச்சுக்களையும், செல்போன் பேச்சுக்களையும் ஒட்டுக் கேட்டு காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அமெரிக்க உளவுத் துறை தீர்மானமாய் அடித்துச் சொல்லியிருக்கிறது. மறைந் திருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற அந்த தீவிரவாதக் கும்பலை வெளிச்சத்துக்குக் கொண்டு வரவேண்டுமென்றால் நாமும் சில வேலைகளை ரிஸ்க் எடுத்து செய்ய வேண்டி யுள்ளது. அப்படி ரிஸ்க் எடுக்கப்பட்ட ஒரு வேலைதான் உங்களுக்கு போன் பண்ணி இங்கே வரவழைத்தது. நான் உங்களுக்கு போன் பண்ணி நீங்கள் வீட்டிலிருந்து காரில் புறப்பட்டதும் உங்களை வழியில் யார் ஃபாலோ செய் கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க மாநகராட்சி குப்பை லாரி போன்ற ஒரு வாகனத்தில் ஒரு போலீஸ் ஃப்ளையிங் ஸ்க் வாடை அனுப்பியிருந்தோம். நாங்கள் நினைத்த மாதிரி



யாரும் உங்கள் காரை ஃபாலோ பண்ணவில்லை. ஆனால் உங்களை எதிர்பார்த்து ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டாரெண்ட்டில் எவனோ ஒருவன் காத்துக் கொண்டு இருந்திருக்கிறான். அப்படியானால் நீங்களும் நானும் செல்போனில் பேசிக் கொண்ட பேச்சை அந்த அந்த தீவிரவாத கும்பல் ஒட்டுக் கேட்டிருக்கிறது...''

விவேக் குறுக்கிட்டான்.

''ஸார்! ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டாரெண்ட்டில் இருந்தது ஒரு ஆண் கிடையாது. பெண்...''

மனோரஞ்சன் திகைத்தார்.

''என்னது... பெண்ணா...?''

''ஆமாம் ஸார்... அங்கேயிருந்து புறப்பட்டு வரும்போது தான் அந்த உண்மையும் தெரிந்தது. ஆர்ட்டிஃபிஷியல் ஃப்ளஷ் ஷால் உருவாக்கப்பட்ட ஒரு ஆணின் முக அமைப்பைப் போன்ற மாஸ்க்கை மாட்டிக் கொண்டு ரெஸ்டாரெண்ட்டுக்கு வந்திருக்கிறாள். அவளை இனிமேல் விசாரிக்கிற விதத்தில் விசாரித்தால் எல்லா உண்மைகளையும் வெளியே கொண்டு வந்து விடலாம்.''

''அந்தப் பெண்ணிடம் இருந்த தங்கப் பதக்கம் எங்கே?''

விவேக் தன் சர்ட் பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்த தங்கப் பதக்கத்தை எடுத்து மனோரஞ்சனிடம் கொடுத் தார்.

அவர் வாங்கிப் பார்த்தார்.

1980-ம் வருடத்திய அந்தப் பதக்கத்தின் ஒருபுறம் நைக் என்னும் கிரேக்க தேவதையின் உருவமும், இன்னொரு புறம் ஒலிம்பிக் தீபமும், கிரேக்க கவிஞரின் கவிதை வரிகளும் தெரிந்தன.

''வெற்றி பெற்ற ஒரு விளையாட்டு வீரரிடம் இருக்க வேண்டிய தங்கப் பதக்கம் ஒரு பெண் தீவிரவாதியிடம் எப்படி வந்தது?'' மனோரஞ்சன் கேட்டுக் கொண்டே வியப்பாய் அந்தப் பதக்கத்தை திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

விவேக்கின் செல்போன் குரல் கொடுத்தது. விவேக் எடுத்து ''எஸ்'' என்றான்.

கண்ட்ரோல் ரூமிலிருந்து பேசினார்கள்.

''மிஸ்டர் விவேக்! உங்களுக்கு ஒரு செய்தி!''

''சொல்லுங்கள்...''

''ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டாரெண்ட்டில் உங்களால் தாக்கப்பட்டு மடக்கப்பட்ட அந்தப் பெண் ஹாஸ்பிட்டலுக்குப் போகும் வழியில், ஜீப்பினின்றும் கீழே குதித்து தப்பி ஓட முயன்றபோது கீழே விழுந்து தலையில் அடிபட்டு மரணம்...''




'சில்பா கடத்தப்பட வேறு என்ன காரணம்?' என்ற பார்வையுடன் ராஜவர்மா, பிரசன்னகுமார், பிஸ்வாஸ் மூன்று பேரும் கேசவமேனனைப் பார்க்க, அவர் மெல்லிய குரலில் சொல்ல ஆரம்பித்தார்.

''சில்பா கடந்த இரண்டு வருடங்களாகவே தன்னுடைய உடம்பை ஆரோக்கியமாகவும், சக்திமிக்கதாகவும் வைத்திருக்க தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகளையும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட உணவையும் சாப்பிட்டுக் கொண்டு வருகிறாள். அந்த மருந்தையும், உணவையும் சாப்பிட்ட காரணத்தால் தான் அவளால் 100 மீட்டர் தூரத்தை பத்து விநாடிகளுக்குள் ஓடிக் கடக்க முடிகிறது. நீளம் தாண்டுதலில் 7 மீட்டர் தாவிக்



குதிக்க முடிகிறது. அவள் சாப்பிடும் ஆயுர்வேத மருந்துகளையும் உணவையும் பற்றிய விபரங்களை வெளியில் உள்ள சிலர் தெரிந்துகொள்ள ஆர்வப்பட்டிருக்கலாம்... அதன் காரணமாக அவள் கடத்தப்பட்டிருக்கலாம் என்று நான் நினைக்கின்றேன்...''

ராஜவர்மா தலையசைத்தார். ''இது சரியான காரணமாய் என்னுடைய மனதுக்குப் படவில்லை. சில்பா சாப்பிடும் ஆயுர்வேத மருந்துகளையும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட உணவைப் பற்றியும் தெரிந்து கொள்ள அவைகளைத் தயாரிப்பவர்களையல்லவா கடத்திப் போக வேண்டும்?''

கேசவமேனன் புன்னகைத்தார். ''அந்த ஆயுர்வேத மருந்து தயாரிப்பாளர்கள் யார் என்கிற விஷயம் சில்பாவுக்கு மட்டும்தானே தெரியும்...? அவளுடைய பயிற்சியாளனாக இருக்கும் எனக்குக்கூட அது தெரியாதே...?''

பிஸ்வாஸ் குறுக்கிட்டார். ''என்னுடைய மனதுக்குப் பட்டதை நான் சொல்லட்டுமா...?''

''சொல்லுங்கள்...''

''ஏதென்ஸில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டியை சீர்குலைக்க சர்வதேச அளவில் தீவிரவாத அமைப்புகள் மும்முரமாக உள்ளன. ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளவிருக்கும் விளையாட்டு வீரர்களைக் கலவரப்படுத்த இனி இது மாதிரியான கடத்தல்கள் நடக்கும். ஏதென்ஸில் இப்போது பாதுகாப்பு பணியில் அந்த நாட்டு அரசாங்கம் 65 ஆயிரம் போலீஸாரையும் 35 ஆயிரம் ராணுவத்தினரையும் ஈடுபடுத்தியுள்ளது. இது தவிர 'நேட்டோ' எனப்படும் கூட்டமைப்பு விமானங்கள், அமெரிக்காவின் பேட்ரியாட் ஏவுகணைகள், இஸ்ரேல் பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சிறப்பு அதிரடிப் படையினர், போர்க் கப்பல்கள் என்று படு பிரமாண்ட பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பாதுகாப்பு செலவு மட்டும் 7 ஆயிரம் கோடி ரூபாய். ஏதென்ஸில் இவ்வளவு கண்டிப்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் இருப்பதினால் தீவிரவாதிகளால் தங்களுடைய நாசகாரச் செயல்களை அங்கே செய்ய முடியாத நிலைமை ஏற்பட் டுள்ளது. அதனால் ஏற்பட்ட கோபத்தைத்தான் தீவிரவாதிகள் மற்ற நாடுகளில் உள்ள ஒலிம்பிக் வீரர்களிடம் காட்டிக் கொண்டு வருகிறார்கள் என்று நினைக்கிறேன்.''

ராஜவர்மா தலையசைத்தார். ''மிஸ்டர் பிஸ்வாஸ்! நீங்கள் சொல்வதுதான் சரியென்று என்னுடைய மனதுக்குப் படுகிறது. நாங்கள் இங்கே உங்களைப் பார்க்க வருவதற்கு முன்னால் சி.பி.ஐ. டைரக்டர் மனோரஞ்சனிடமிருந்து எனக்கு ஒரு தகவல் வந்தது. நம் நாட்டில் உள்ள ஒலிம்பிக் வீரர்களுக்கு கொடுக்க வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றிப் பேசு வதற்காக க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸர் விவேக்கையும் அவ ருடைய உதவியாளர் விஷ்ணுவையும் உளவுப் பிரிவு செய லகத்துக்கு அழைத்திருந்தாராம். விவேக்கும் விஷ்ணுவும் ஒரு ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டாரெண்ட்டுக்கு முன்னால் காரை நிறுத்தியபோது - அவர்களைப் பார்த்துவிட்ட ஒரு நபர் இரண்டு பேரையும் 'போலீஸ்துறை' என்று உடனே புரிந்து கொண்டு டாய்லட்டுக்குள் நழுவிப் போயிருக்கிறான். விவேக் அந்தப் பேர்வழியைத் தாக்கி மடக்கியபோதுதான் அது ஆண் அல்ல ஒரு பெண் என்பது தெரிந்து இருக்கிறது. மடக்கப்பட்ட அவளிடம் ஒரு ஒலிம்பிக் தங்கப் பதக்கமும் இருந்திருக்கிறது.''

''அந்தப் பெண் இப்போது எங்கே...?''

''ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டாரெண்ட்டிலிருந்து ஹாஸ்பிட்ட லுக்குக் கொண்டு போகும் வழியில் அவள் ஜீப்பினின்றும் குதித்து தப்பிக்க முயன்றபோது தலையில் அடிபட்டு இறந்து போய் விட்டாள். அந்தப் பெண் தீவிரவாதியைப் போலவே இன்னும் சிலர் இந்த சென்னையிலேயே இருக்கக் கூடும்.



அந்த தீவிரவாதிகள்தான் சில்பாவின் கடத்தலுக்குக் காரணம் என்று நான் நினைக்கிறேன்...''

''அந்த தீவிரவாதப் பெண் யார்... எந்த நாட்டைச் சேர்ந்தவள் என்பது தெரிந்ததா...?''

''உங்களிடம் பேசிவிட்டு இப்போது நாங்கள் அங்கே தான் போகப் போகிறோம்...'' ராஜவர்மா சொல்லிக் கொண் டிருக்கும்போதே கேசவ மேனனின் செல்போன் ரிங் டோனை வெளியிட்டது. அவர் எடுத்து செவிமடுத்துவிட்டு ராஜ வர்மாவை ஏறிட்டார்.

''ஸார்... சில்பாவின் அப்பா அச்சுதன் நம்பியார் லைனில் இருக்கிறார். உங்களோடு பேச வேண்டுமாம்.

ராஜவர்மா செல்போனை வாங்கி காதில் வைத்தார்.

''சொல்லுங்கள் நம்பியார்.''

''என்னத்தைச் சொல்வது... என் மகள் கடத்தப்பட்டு இரண்டு மணி நேரம் கடந்து விட்டது. அவளை மீட்க என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள்...?''

''அதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறோம். க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸர் விவேக்கோடு இதைப்பற்றி டிஸ்கஸ் செய்து விட்டு நடவடிக்கைகளில் இறங்கி விடுவோம். கவலைப் படாதீர்கள். மிஸ்டர் நம்பியார். இன்னும் 24 மணி நேரத்தில் சில்பா உங்களுக்கு முன்பாய் உட்கார்ந்து கொண்டிருப்பாள்.''

''என்னுடைய மகன் உங்களோடு பேச வேண்டுமாம்...''

''கொடுங்கள்.''

சில விநாடிகளுக்குப் பின் சில்பாவின் அண்ணன் பங்க ஜாட்சன் குரல் கோபமாய் ஒலித்தது.

''ஸார்... கடந்த ஒரு மாத காலமாகவே இங்கே உள்ள ஒலிம்பிக் வீரர்களுக்கு தீவிரவாதிகளால் ஆபத்து என்று

சொல்லி வந்திருக்கிறீர்கள். ஆபத்து இருக்கிறது என்று தெரிந்தும் ஏன் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவில்லை...?

"இதோ பாருங்கள் பங்கஜாட்சன்...! வீரர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது என்னுடைய வேலை அல்ல. அது முழுக்க முழுக்க மத்திய அரசின் விளையாட்டுத் துறை அமைச்சகம் செய்ய வேண்டிய வேலை. என் மீது நீங்கள் கோபப்பட்டு எந்தப் பயனும் இல்லை... இந்தியாவின் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது சென்னையில் உள்ள ஒலிம்பிக் வீரர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. தீவிரவாதிகள் இங்கே தன்னுடைய கைவரிசையைக் காட்டு வார்கள் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை... போலீஸின் அதிரடிப்படை இப்போது மாநிலம் முழுவதும் பரவி அந்த தீவிரவாதிகளை வேட்டையாடும் பணியில் ஈடுபட்டுள்ளது. எந்த நிமிஷத்திலும் சில்பா மீட்கப்படலாம்..."

"ஸார்...! எனக்கு ஒரு சந்தேகம்..."

"என்ன...?"

"சில்பா கடத்தப்பட்ட காரணம் தீவிரவாதிகளாய் இருக்க முடியாது."

"வேறு யார்...?"

"சில்பா ஒலிம்பிக் தடகள போட்டிகளில் 'தங்கம்' பெற்றுவிடக் கூடாது என்று நினைக்கிற சக விளையாட்டு வீரர்கள் சிலர் இதே மண்ணில் இருக்கிறார்கள். அந்த புண்ணியவான்களில் யாராவது ஒருத்தர் இந்த வேலையைச் செய்து இருக்கலாம்..."

"உங்களுடைய சந்தேகம் தவறானது பங்கஜாட்சன். ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளப் போகும் எல்லா வீரர்களும் வீராங்கனைகளும் பதக்கங்களை வெல்ல வேண்டும் என்று ஒரே முனைப்போடு இருக்கிறார்களே தவிர



ஒருத்தர் மேல் ஒருத்தர் பொறாமையோ காழ்ப்புணர்ச்சியோ கொள்வது இல்லை. இதை நான் அனுபவபூர்வமாக உணர்ந்து இருக்கிறேன்..."

"ஸார்... யார் மனதில் என்ன இருக்கிறது என்பதை யாராலும் கணிக்க முடியாது. நீங்களும் சரி போலீஸும் சரி சில்பா கடத்தப்பட்டதை ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டாம்... தீவிரவாதிகள் என்ற பெரிய வட்டத்தை மட்டும் பார்க்காமல் பக்கத்தில் இருக்கிற சின்னச் சின்ன வட்டங் களையும் பாருங்கள்."

"ஓ.கே...! போலீஸ்கிட்ட உங்கள் கருத்தையும் சொல்றேன்." ராஜவர்மா பேசிவிட்டு செல்போனை அணைத்து கேசவமேன னிடம் நீட்டிவிட்டு எழுந்தார்.

"மிஸ்டர் பிஸ்வாஸ்... நாங்கள் புறப்படுகிறோம். ஹாஸ்பிட்ட லில் எங்களுக்காக சி.பி.ஐ. டைரக்டர் மனோரஞ்சனும், க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர் விவேக்கும் காத்துக் கொண்டிருப் பார்கள். கிரேக்க மொழியில் இருந்த இந்தக் கடிதத்தைப் படித்துக் காட்டிய உங்களுக்கு நன்றி..."

ராஜவர்மா, கேசவமேனன், பிரசன்னகுமாரும் விடை பெற்றுப் போனதும் -

பிஸ்வாஸ் அப்படியே ஐந்து நிமிஷம் உட்கார்ந்திருந்து விட்டு பின் எழுந்தார். தன்னுடைய நூலக அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டவர், அலமாரியில் அடுக்கப்பட்டிருந்த புத்தக வரிசைக்குப் போய் புத்தகங் களைத் தள்ளிவிட்டு உள்ளே இருந்த அந்த செல்போனை எடுத்தார். பாஸ்வேர்ட் மூலம் அதை உயிர்ப்புக்குக் கொண்டு வந்தவர் டயலில் சில எண்களை அழுத்திவிட்டு போனை காதுக்கு வைத்தார்.

மறுமுனையில் ரிங்போய் ரிஸீவர் எடுக்கப்பட்டதும் மெல்ல குரல் கொடுத்தார்.

''நான் பிஸ்வாஸ்.''

மறுமுனையில் ஒரு ஆண் குரல் கேட்டது.

''ஏதாவது செய்தி உண்டா...?''

''உண்டு...''

''என்ன...?''

''சென்னை வானத்தில் வாணவேடிக்கைகள் ஆரம்பமாகி விட்டன...''




''சிஸ்டர்...! நீங்க ஏன் 'மிஸ். சென்னை' அழகிப் போட்டியில் கலந்துக்கக் கூடாது...? இடது பக்கத்திலிருந்து பார்த்தா சிநேகா மாதிரியும், வலது பக்கத்திலிருந்து பார்த்தா சிம்ரன் மாதிரியும், பின்னாலிருந்து பார்த்தா த்ரிஷா மாதிரியும் இருக்கீங்க... அடுத்த வருஷம் 'மிஸ். சென்னை' அழகிப் போட்டியில் கலந்துக் கோங்களேன்...''

அந்த அழகான இளவயது நர்ஸிடம் விஷ்ணு வழிந்து கொண்டிருக்க - விவேக் கௌண்ட்டரில் இருந்த ரிசப்ஷனிஸ் டிடம் கேட்டான்.

''சீஃப் டாக்டர் பாண்டுரங்கன் வரச் சொல்லியிருந்தார். பார்க்க முடியுமா...?''

''நீங்க மிஸ்டர் விவேக்தானே...?''

''எஸ்...''

''டாக்டர் உங்களுக்காகத்தான் தன்னோட அறையில் வெயிட் பண்ணிட்டிருக்கார்... ஃபர்ஸ்ட் ஃப்ளோர்... ரெண் டாவது ரூம்...''



''தேங்க்யூ...''

விவேக் விஷ்ணுவை அந்த நர்ஸிடமிருந்து பெயர்த்து எடுத்துக் கொண்டு நடந்தான்.

''பாஸ்... இந்த ஹாஸ்பிட்டல்ல இருக்கிற எல்லா நர்ஸ் களும் கேரளா சைடு போலிருக்கு...''

''டேய்...''

''இப்ப என்ன பாஸ் தப்பா சொல்லிட்டேன்... கேரளான்னு சொல்றது கெட்ட வார்த்தையா?''

''பேசாம வாடா... உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா...?''

முதல் மாடி ஏறி இரண்டாவது அறைக்குள் நுழைந் தார்கள்.

சீஃப் டாக்டர் பாண்டுரங்கனுக்கு முன்பாக ராஜவர்மா, கேசவமேனன், மனோரஞ்சன் உட்கார்ந்திருந்தார்கள்.

''வாங்க மிஸ்டர் விவேக்...! உங்களுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கோம்... உங்களுக்கு மிஸ்டர் ராஜவர்மாவைத் தெரியுமில்லையா?''

''ம்... தெரியும்... நிறைய ஃபங்க்ஷன்ல பார்த்து இருக் கேன்.''

''இவர் மிஸ்டர் கேசவமேனன்... சில்பாவின் கோச்...''

அறிமுகங்களை முடித்துக் கொண்டு விவேக்கும் விஷ்ணு வும் எதிரில் இருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்.

பாண்டுரங்கன் சில விநாடிகள் மௌனமாக இருந்து விட்டு பேச்சை ஆரம்பித்தார்.

''உங்களைத் தாக்கிய அந்தப் பெண்ணின் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் பத்து நிமிஷத்துக்கு முந்திதான் என் னோட கைக்கு வந்தது. போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் இப்போ ஒரு எதிர்பாராத செய்தி கிடைச்சிருக்கு...''

விவேக்கும் விஷ்ணுவும் டாக்டரைக் குழப்பமாய்ப் பார்க்க - அவர் தொடர்ந்தார்.

''உங்களைத் தாக்கிய அந்தப் பெண் உண்மையிலேயே பெண் கிடையாது.''

''தென்...?''

''நாம் 'அலி' என்று சொல்கிற அரவாணி.''

விஷ்ணு விவேக்கின் காதருகே கிசுகிசுத்தான். ''நான் அப்பவே நினைச்சேன் பாஸ்... அது... 'மிஸ். கூவாகம்'ன்னு...''

டாக்டர் தொடர்ந்தார். ''அது மட்டுமில்லை மிஸ்டர் விவேக்...! அந்த அரவாணியின் உடம்பு ஒரு கல்லைப் போல இறுகியிருக்கிறதால... ஒரு காலத்துல கடுமையான விளையாட்டுக்களில் ஈடுபட்டிருக்கலாம்... அவளிடம் தங்கப் பதக்கம் இருந்ததா சொல்லியிருக்கீங்க. ஒருவேளை ஒலிம்பிக்கில் கூட பார்ட்டிஸிபேட் பண்ணியிருக்கலாம்... இல்லையா...?''

''தென் வீ கேன் டூ ஒன் திங்க்... டாக்டர்...''

''சொல்லுங்க... விவேக்... என்ன பண்ணலாம்..?''

''அந்த அரவாணியிடம் இருந்த பதக்கத்துல 1980ன்னு போட்டிருந்தது. 1980-ல் ஒலிம்பிக் போட்டிகள் மாஸ்கோவில் நடந்தபோது அந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கம் பெற்று இருக்கலாம். அரவாணியின் போட்டோவை உலக ஒலிம்பிக் கமிட்டிக்கு அனுப்பி வைத்தால் நமக்கு ஒரு மணி நேரத்துக்குள் தகவல் கிடைத்து விடும்.''

ராஜவர்மா குறுக்கிட்டார்.

''ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் பாப் ஹோப்ஸ் எனக்கு நெருங்கிய நண்பர். அவர்க்கே போட்டோவை அனுப்பி கேட்டுப் பார்க்கலாம்...'' ராஜவர்மா சொல்லிக் கொண்டிருக்கும்போதே -



கதவு மெலிதாய் தட்டப்படும் சத்தம் கேட்டது. டாக்டர் ''எஸ்'' என்று குரல் கொடுத்ததும் சில்பாவின் அப்பா அச்சுதன் நம்பியாரும், அவளுடைய அண்ணன் பங்கஜாட்சனும் இறுகிய முகங்களோடும் கோபப் பார்வைகளோடும் உள்ளே வந்தார்கள். 'யார் இவர்கள்' என்பது போல் டாக்டர் பார்க்க ராஜவர்மா அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார். அதைப் பொருட்படுத்தாத - அச்சுதன் நம்பியார் எல்லோரையும் பார்த்தபடி ஆவேசத்தில் இரைந்தார்.

''என்னோட பொண்ணை மீட்க என்ன ஏற்பாடு பண்ணியிருக்கீங்க...?''

''கோபப்படாதீங்க அச்சுதன்... உங்க பொண்ணை மீட்கறதைப் பத்தித்தான் பேசிட்டிருக்கோம்...'' கேசவமேனன் சொல்ல - அவரைக் கோபமாய்ப் பார்த்தான் பங்கஜாட்சன்.

''ஃபேனுக்குக் கீழே உட்கார்ந்து பேசிட்டிருந்தா என்னோட தங்கச்சி சில்பா திரும்பி வந்துடுவாளா...?''

''ஏன் இப்படிப் பொறுப்பு இல்லாமே பேசறீங்க பங்கஜாட்சன்...? சில்பா கடத்தப்பட்ட நிமிஷத்திலிருந்து ஒவ்வொரு நிமிஷமும் நாங்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்துக்கிட்டு இருக்கோம். போலீஸ் அதிரடிப் படை நகரின் மூலை முடுக்குகளையெல்லாம் குடைஞ்சு எடுத்துட்டிருக்காங்க...''

''இதெல்லாம் சம்பிரதாய நடவடிக்கைகள். சில்பாவை மீட்க உருப்படியாய் உங்ககிட்டே என்ன திட்டம் இருக்கு 12 மணி நேரத்துக்குள்ளே சில்பா எங்க வீட்டுக்கு வரணும். இல்லேன்னா அரசியல் கட்சிகளின் உதவியோடு ஒரு பெரிய போராட்டமே வெடிக்கும். இன்னிக்கு பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாய் இருக்கிற மக்கள் ஜனநாயக் கட்சிக்கு நான் மாநில செயலாளர். நான் நினைச்சா அமைதியாய் இருக்கிற இந்த மாநிலத்தில் புரட்சிப் புயல் வீசும்...''

விவேக் அவனை ஏறிட்டான்.

''இதோ பாருங்க... பங்கஜாட்சன்...! இது ஒரு உணர்வு பூர்வமான விஷயம். இதுல அரசியலைக் கொண்டு வந்து கலக்காதீங்க... சில்பா உங்களுக்கு தங்கையாய் இருந்தாலும் 2004 ஒலிம்பிக்கில் இந்த இந்திய நாட்டுக்கே தங்கப் பதக்கம் வாங்கித் தரப் போகிற தங்க மங்கை. சில்பா கடத்தல் பேர் வழிகளிடமிருந்து உடனடியாய் மீட்கப்படணும்கறதுதான் ஒவ்வொரு இந்தியனோட எண்ணமும். அந்த எண்ணத்தை செயல்படுத்தத்தான் இங்கே எல்லாருமா உட்கார்ந்து பேசிட்டிருக்கோம். நல்லா பாருங்க யார் கையிலும் சிகரெட் கிடையாது. சீட்டுக்கட்டு கிடையாது. நாங்க அரட்டைக் கச்சேரி நடத்தலை. சில்பாவை கடத்திக்கிட்டுப் போனவங்க தீவிரவாதிங்களா இல்லை வேற யாராவதான்னு பல்வேறு கோணங்களில் யோசனை பண்ணிட்டிருக்கோம். இந்த விவ காரத்துல நமக்குக் கிடைச்சிருக்கக்கூடிய ஒரே ஒரு பவர் ஃபுல்லான விஷயம்... 1980-ல் மாஸ்கோ ஒலிம்பிக் போட்டி யில் 'தங்கம்' வாங்கிய ஒரு அரவாணி. அந்த அரவாணி உண்மையிலேயே ஒரு ஒலிம்பிக் அத்லெடிக்கா... இல்லை தீவிரவாதியா என்பது ஒலிம்பிக் கமிட்டியிலிருந்து பதில் வந்தால்தான் தெரியும்... அந்த அரவாணி ஒரு தீவிரவாதி என்று நிருபணமாயிட்டால் சில்பாவைக் கடத்தியதும் தீவிர வாதிகள்தான்ங்கிறதை நாம் கன்ஃபர்ம் பண்ணிக்கலாம். அதுக்கப்புறம் சில்பாவை மீட்க புதிய வியூகங்களை அமைக் கலாம்...''

''எனக்கு இந்த விளக்கமெல்லாம் தேவையில்லை மிஸ்டர் விவேக்...! எனக்கு என்னுடைய தங்கை சில்பா வேணும். அவ உடனடியா மீட்கப்படணும். அவளுடைய கற்புக்கோ உயிர்க்கோ எந்த பங்கமும் வரக்கூடாது... சில்பா இந்த ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு தங்கம் வாங்கிக் கொடுக்கிற பொண்ணுன்னு சொன்னீங்க. அப்படிப்பட்ட பொண்ணை



மீட்கணும்ன்னா அதுக்கு ராணுவம்தான் வரணும். இந்த சென்னைப் போலீஸாலே சில்பாவை மீட்க முடியாது. உள்ளூர் கள்ளச் சாராய பேர்வழிகளையே பிடிக்க முடியாத போலீஸ் துறையாலே சில்பா இருக்கிற திசையைக்கூட கண்டு பிடிக்க முடியாது...''

விவேக் வெகுண்டு எழுந்தான். ''லுக் மிஸ்டர்! சென்னை போலீஸை இன்னமும் குறை கூறிப் பேசறதை நான் அனு மதிக்க மாட்டேன். போலீஸ் டிபார்ட்மெண்ட்ல இருக்கிற ஒவ்வொருவரும் கடுமையான பயிற்சிகள் மூலமா பதவிக்கு வந்தவங்க, ஒரு சிலரைத் தவிர மத்தவங்க எல்லோருமே கடமையுணர்ச்சியோடு மக்களுக்கு சேவை பண்ணிகிட்டு இருக்காங்க. அந்த ஒரு சிலரை மட்டும் நீங்க மனசுல வெச்சு கிட்டு மொத்த டிபார்ட்மெண்ட்டையும் கேவலமாப் பேசறது கொஞ்சமும் சரியில்லை.''

''ஓ.கே... மிஸ்டர் விவேக்... உங்க போலீஸ் டிபார்ட் மெண்ட் கடமையுணர்ச்சி மிக்க திறமையான டிபார்ட்மெண்ட் தான். இதை நான் ஒத்துக்கணும்ன்னா நீங்க ஒரு காரியம் பண்ணணும்.''

''என்ன...?''

''இன்னும் 12 மணி நேரத்துக்குள்ளே சில்பாவை உயி ரோடு கொண்டு வந்து... எம் முன்னாடி நிறுத்தணும்.''

''அப்படி நிறுத்திட்டா...?''

''உங்க டிபார்ட்மெண்ட்ல இருக்கிற ஒவ்வொரு போலீஸ் ஆபீஸரோட கால்களையும் தொட்டுக் கும்பிடறேன் போதுமா...?''

விவேக் தன்னுடைய கையில் இருந்த வாட்ச்சைப் பார்த் தான். ''இப்போ மணி மத்தியானம் ரெண்டு. இன்னிக்கு ராத்திரி ரெண்டு மணிக்குள்ளே சில்பா உங்க வீட்ல இருப்பா...''

''ஒருவேளை அது முடியலைன்னா...?''

''டேய் விஷ்ணு...''

''பாஸ்...''

''இதுக்கு பதில் நீ சொல்லு...''

விஷ்ணு பங்கஜாட்சனை ஏறிட்டான். நிதானமான குரலில் அழுத்தமாய் சொன்னான்.

''முடியாது என்கிற வார்த்தையே எங்க பாஸ் அகராதியில் கிடையாது... அப்படியொரு வார்த்தை அகராதியில் இருந்துட்டா அது எதிரிகளுக்குத்தான் சொந்தம். இன்னிக்கு ராத்திரி மணி 1.59க்குள்ளே நீங்க என்னோட பாஸ்க்கு போன் பண்ணி உங்க சிஸ்டர் சில்பா உங்ககிட்ட வந்து பத்திரமாய் சேர்ந்ததுக்காக நன்றி சொல்லப் போறீங்க...!''



# 10

**வி**வேக் நல்ல வேகத்தில் காரை விரட்டிக் கொண்டிருக்க விஷ்ணு பொருமிக் கொண்டிருந்தான்.

''பாஸ்! போலீஸ் டிபார்ட்மெண்ட்ல சில பேர் கரப்ட்டடா இருக்கிறதால ஒட்டு மொத்த டிபார்ட்மெண்ட்டையும் குறை சொல்றது எந்த வகையில் நியாயம்? டிபார்ட்மெண்ட்ல 90% பேர் ஒழுங்கா தன்னோட டியூட்டியைப் பார்க்கிறதாலத்தான் தமிழ்நாட்ல அவனவன் பெண்டாட்டி குழந்தைகளோடு பயமில்லாமே வெளியே போயிட்டு வர முடியுது. ராத்திரியில் நிம்மதியாய் தூங்க முடியுது. இது அந்த பங்கஜாட்சனுக்குப் புரியலையே? என்னமா பேசிட்டான்... பாஸ்...''

''அதை விடுடா...! இப்பவே ஒரு மணி நேரம் ஓடிப் போயிடுச்சு. இன்னும் கெடு முடியறதுக்கு 11 மணி நேரம்



தான் இருக்கு. ராத்திரி ரெண்டு மணிக்குள்ளே சில்பாவை அந்த பங்கஜாட்சனுக்கு முன்னாடி நிறுத்தணும்... போலீஸ் டிபார்ட்மெண்ட்டை தரக்குறைவாய் பேசினதுக்காக அந்த ஆள் ஒவ்வொரு போலீஸ் ஆபீஸரோட காலையும் தொட்டுக் கும்பிடணும்...''

''பாஸ்... சவால் விட்டுட்டோம்... முடியுமா?''

''ஏண்டா முடியாது... இனிமே நமக்கு வரப்போகிற ஒவ்வொரு நிமிஷமும் முக்கியம்...''

''இப்போ... எங்கே போறோம் பாஸ்...?''

''சில்பாவைக் கடத்திக்கிட்டு போனவங்களோடு கடுமையாய் போராடி அதன் காரணமா படுகாயங்களோடு ஹாஸ்பிட்டலில் அட்மிட்டாகியிருக்கிற முரளிதரனைப் பார்க்க...! இந்தக் கேஸ்ல கடத்தல் பேர்வழிகளைப் பார்த்த ஒரே ஆள் முரளிதரன்தான்.''

''கடத்தல் பேர்வழிகள் முகமூடிகளைப் போட்டிருந்தால அவங்களோட முகங்களைப் பார்க்க முடியலைன்னு முரளிதரன் தன்னோட ஸ்டேட்மெண்ட்ல சொல்லியிருக்காரே... பாஸ்...?''

''அது எனக்கும் தெரியும்...! முகமூடிகளைப் போட்டுக்கிட்டு முகங்களை மறைச்சுக்கிட்டாலும் சிலருடைய நடை உடை பாவனைகள், அங்க சேஷ்டைகள், பேச்சு மாடுலேஷன் - அவங்க யார்ங்கிறதைக் காட்டிக் கொடுத்துடும்... அதைப்பத்தித்தான் இப்போ முரளிதரன் கிட்டே விசாரிக்கப் போறோம்...''

''பாஸ்...! என்னோட மனசுக்குள்ளே இருக்கிற சந்தேகப் பட்சி என்ன சொல்லுது தெரியுமா...?

''சொல்லு...''

''முரளிதரன் ஒரு ஏழை இளைஞர். சில்பா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில்... பங்கேற்க தகுதி படைத்த

புகழ்மிக்க பெண். அதிலும் பணக்காரக் குடும்பம். 'முரளி தரன் - சில்பா' காதல் யார்க்கோ பிடிக்கலை... முரளிதரனைத் தீர்த்துக்கட்ட நினைச்சிருக்காங்க. அவனை மாத்திரம் தனியா தீர்த்துக் கட்டினால் கொலைக்குக் காரணம் காதல்தான்னு பட்டவர்த்தனமா தெரிஞ்சுடும். அதனால் தீவிரவாதிகள் பேர்ல யாரோ ரெண்டு பேர் இதுல இன்வால்வாகி முரளி தரனைக் கொலை பண்ண முயற்சி செஞ்சிருக்காங்க. அவன் படுகாயங்களோடு அதிர்ஷ்டவசமா தப்பிச்சுட்டான். சில் பாவைக் கடத்திட்டு போனவங்க இந்நேரம் அவ உடம்பைத் தொட்டுக்கூடப் பார்த்து இருக்கலாம்... பாஸ்...''

''ஸோ... இது தீவிரவாதிகளோட வேலை இல்லைன்னு சொல்றே...?''

''ஆமா... பாஸ்... முழுக்க முழுக்க இது காதல் விவகாரம்'' விஷ்ணு சொல்ல, கார் ஹாஸ்பிட்டலுக்குள் நுழைந்தது.

ரிசப்ஷனில் விசாரித்துக்கொண்டு இரண்டாவது மாடி யறையில் இருந்த முரளிதரனைப் போய்ப் பார்த்தார்கள்.

உடம்பில் ஆங்காங்கே பாண்டேஜ் கட்டுகள் தெரிய முரளிதரன் சோர்வாய் கண்மூடிப் படுத்திருந்தான். நர்ஸ் ஒருத் திக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துக் கொண்டிருந்த டாக்டர் அவர்களைப் பார்த்ததும் அடையாளம் தெரிந்து கொண்டு கேட்டார்.

''கடத்தப்பட்ட சில்பாவைப் பத்தி ஏதாவது தகவல் கிடைச்சுதா மிஸ்டர் விவேக்...?''

''நாட்... யெட் டாக்டர்... அதுக்கான விசாரணையில்தான் இப்போ முழுசா இறங்கியிருக்கோம்... பேஷண்ட் முரளிதரன் கிட்டே கொஞ்சம் பேசலாமா டாக்டர்..? அவர் கொடுக்கப் போகிற தகவல்களை வெச்சுகிட்டுத்தான் இந்த கேஸ்ல மேற்கொண்டு மூவ் பண்ண முடியும்.''



''ஒரு பத்து நிமிஷத்துக்கு மேலே அவர்கிட்டே பேச வேண்டாம். முரளிதரன் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் நிறையவே பாதிக்கப்பட்டிருக்கார்... விசாரணையை சீக்கிரமா முடிச்சுகிட்டா ரொம்பவும் நல்லது.''

டாக்டர் சொல்லிவிட்டு போய்விட விவேக்கும் விஷ்ணு வும் முரளிதரனை நெருங்கினார்கள். விவேக் அவனுடைய மணிக்கட்டை பற்றி மெல்ல கூப்பிட்டான்.

''முரளி...''

அவன் கண்களை மலர்த்தினான். வறண்ட உதடுகள் அசைந்தது. ''ஸ... ஸார்...''

''என்னை உங்களுக்குத் தெரியுதா...?''

'தெரியும்' என்பது போல் தலையசைத்தான்.

விவேக் தொடர்ந்தான். ''முரளி...! கடத்தப்பட்ட சில்பாவை மீட்கிற முயற்சியில் போலீஸ் இப்போ மும்முரமா இயங் கிட்டிருக்கு... இன்னும் பன்னிரெண்டு மணி நேரத்துக்குள்ளே சில்பாவை பத்திரமா மீட்டாகணும்... அதுக்கு நீங்க சொல்லப் போற தகவல்கள் உதவியாய் இருக்கணும்... நான் கேட்கப் போகிற கேள்விகளுக்கு நிதானமா யோசிச்சு பதில் சொல் லுங்க...''

அவன் தலையசைத்தான். விவேக் சில விநாடிகள் மௌனித்துவிட்டு கேட்டான்.

''நீங்களும் சில்பாவும் காதலிக்கிற விஷயம் சில்பாவோட அண்ணனுக்கும் அப்பாவுக்கும் முன்னாடியே தெரியுமா?''

''தெரியும்... ஸார்.''

''அவங்க எதிர்ப்பு தெரிவிக்கலையா...?''

''எதிர்ப்பு தெரிவிச்சாங்க... பணம், அந்தஸ்தைக் காரணம் காட்டி எங்க ரெண்டு பேரையும் பிரிக்கப் பார்த்தாங்க. பட்...

சில்பா ரொம்பவும் ஸ்ட்ராங்கா நின்னு அவ அப்பா கிட்டேயும் அண்ணன்கிட்டேயும் எனக்கு 'கல்யாணம்ன்னு ஒண்ணு நடந்தா அது முரளியோடுதான்'னு தீர்மானமா சொல்லிட்டா. 'மீறி எங்களைப் பிரிக்கப் பார்த்தா ரெண்டு பேரும் ஒரே மரத்துல தூக்கு போட்டுக்கிட்டு செத்துப் போயிடுவோம்'ன்னும் மிரட்டினா. அதுக்கப்புறம் அவளோட அப்பாவும், அண்ணனும் எங்க காதல் விவகாரத்தில் குறுக்கே வரலை. சில்பா இந்த ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வாங்கி னாலும் ரெண்டு பேரும் முறைப்படி கல்யாணம் பண்ணிக்க இருந்தோம்.''

''உங்க சைடில் காதலுக்கு ஏதாவது எதிர்ப்பு இருந்ததா...?''

''நான் ஒண்டிக் கட்டை ஸார்... என்னோட அப்பாவும் அம்மாவும் சின்ன வயசிலேயே எனக்கு இல்லாமே போய்ட் டாங்க. தாய் மாமா ஒருத்தர்தான் என்னை வளர்த்தார். அவரும் இப்ப இல்லை. எப்படியோ ஒரு டிகிரி படிச்சேன். ஒரு காட்டன் மில்லில் க்ளார்க் உத்யோகம் கிடைச்சுது. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வாங்கிய சில்பாவுக்கு பாராட்டு தெரிவிச்சு ஒரு கவிதையை தபால்ல அனுப்பி வெச்சேன். அதுக்கு நன்றி தெரிவிச்சு ஒரு கடிதம் வந்தது. அதுக்கப்புறம் நான் ஒரு தடவை டெலிபோனில் பேசினேன். இந்தப் பழக்கம் படிப்படியா அதிகரிச்சு கடைசியில் காதலில் வந்து முடிஞ்சுது. சில்பாவோட அந்தஸ்துக்கும் தகுதிக்கும் நான் ஏற்றவன் கிடையாதுதான். இருந்தாலும் சில்பா இல்லாமே என்னால வாழ முடியாதுங்கிற நிலைமைக்கு நான் வந்துட்டேன்...''

''சில்பா கடத்தப்பட்டதுக்கும் நீங்கள் தாக்கப்பட்டதுக்கும் உங்க காதல்தான் காரணமா... இல்லை வேற ஏதாவது காரணமா...?''

''காதல் இதுக்குக் காரணமாய் இருக்க முடியாது ஸார்... சில்பாவோட புகழை ஜீரணிக்க முடியாத யாரோ பொறாமை



பிடிச்சவங்கதான் இப்படியொரு காரியத்தைப் பண்ணியிருக் கணும்.''

''அவங்க யாராய் இருக்கலாம்?''

''ஸாரி ஸார்... என்னால கெஸ் பண்ண முடியலை... சில்பாவுக்கு நிறைய ஃப்ரண்ட்ஸ்... அதுல யாரு நல்லவங்க... யாரு கெட்டவங்கன்னு எனக்கு எப்படி ஸார் தெரியும்...?''

''சில்பாவோட அண்ணன் பங்கஜாட்சன் உங்களை எப்ப வாவது மிரட்டியிருக்காரா...?''

''இல்ல... ஸார்...''

விவேக்கும் விஷ்ணுவும் முரளிதரனிடம் விசாரணையை முடித்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தார்கள்.

கதவுக்கு வெளியே.

பங்கஜாட்சனும் அவனுடைய அப்பாவும் நின்றிருந் தார்கள். கையில் கூடை நிறைய ஆப்பிள்கள்.

## 11

''அடடே... அப்புறம்!'' என்றாள் ரூபலா.

இடம்: விவேக்கின் வீடு.

நேரம்: சாயந்தரம் ஐந்து மணி.

''அப்புறம் என்ன மேடம்... நானும் பாஸும் ரூமை விட்டு வெளியே வர் றோம்... வெளியே பங்கஜாட்சனும் அவனுடைய அப்பா வும் கையில் கூடை நிறைய ஆப்பிள்களோடு நின்னுட் டிருக்காங்க... ஒரு விநாடி ஆடிப் போயிட்டோம்...''

''மேல சொல்லு விஷ்ணு...! பங்கஜாட்சன் ஏதாவது கிண்டலா சொல்லியிருப்பானே...?''

''சொல்லாமே இருப்பானா.. சொன்னான்...''

''என்ன சொன்னான்...?''

''சில்பாவைக் கடத்திட்டு போன ஆட்கள் யார்ங்கிறதையும் அவங்க பெயர்களையும் எங்க மாப்பிள்ளை முரளிதரன் உங்ககிட்டே சொல்லியிருப்பார்ன்னு நினைக்கிறேன். சீக்கிரம் அவங்களைப் போய் அரஸ்ட் பண்ணி என்னோட சிஸ்டர் சில்பாவை மீட்டுகிட்டு வாங்க மிஸ்டர் விவேக்...! நான் போலீஸ் ஆபீஸர்ஸ் கால்கள்ல விழுந்து கும்பிடத் துடியா துடிச்சிகிட்டு இருக்கேன்'னு சொன்னான்...''

''அதுக்கு உங்க பாஸ் என்ன சொன்னார்?''

''ஒண்ணும் சொல்லலை...''

''நீயாவது சொல்லியிருக்கலாமில்லையா...?''

''நான் சொல்லலாம்ன்னு வாயைத் திறந்தேன். பாஸ் தடுத்துட்டார்... இல்லேன்னா அகராதியில் இல்லாத ஒரு வார்த்தையை யூஸ் பண்ணி அவனைத் திட்டியிருப்பேன்...''

ரூபலா கோபமாய் விவேக்கை ஏறிட்டாள்.

''விஷ்ணுவை ஏன் தடுத்தீங்க...?''

''இதோ பார் ரூபி...! நம்ம திறமையை செயல்லதான் காட்டணும்... பேச்சில் அல்ல.''

''என்னங்க...! இப்ப மணி அஞ்சு. இன்னும் கெடு முடிய ஒன்பது மணி நேரம் தான் இருக்கு... அதுக்குள்ளே சில்பாவைக் கண்டு முடிச்சுட முடியுமா..?''

''அதுக்குத்தான் முயற்சி பண்ணிட்டிருக்கேன்.''

''இதுவரைக்கும் ஏதாவது தடயம் கிடைச்சிருக்கா?''

''பெரிய சைபர்...'' விவேக் காற்றில் ஒரு பெரிய வட்டம் போட்டுக்காட்டினான்.

''அந்த பங்கஜாட்சன் கிட்டே டைம் கேட்டதுதான் கேட்டீங்க... ஒரு 48 மணி நேரம் கேட்கக்கூடாது... இப்படியா 12 மணி நேரம் கேட்பாங்க...?''



ரூபலா அங்கலாய்த்துக் கொண்டிருக்கும்போதே வீட்டு காம்பௌண்ட் கேட் அருகே பைக் சத்தம் கேட்டது.

''விஷ்ணு...! யார்ன்னு பாரு...''

எட்டிப் பார்த்துவிட்டு விஷ்ணு சொன்னான். ''பாஸ் ஃபாரன்ஸிக் டிபார்ட்மெண்ட்டிலிருந்து ரஹ்மான் வந்திருக்கார். இங்கே எதுக்காக வந்திருக்கார்ன்னு தெரியலையே...?''

''நான்தாண்டா வரச் சொன்னேன்...''

''எதுக்கு பாஸ்...?''

''அவர்கிட்டே எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு?''

''பாஸ்...! எனக்கு தெரியாமே என்னமோ அண்டர் கிரௌண்ட் வேலை பண்றீங்க... அப்புறம் ஏதாவது ஒரு பிரச்னையில் மாட்டிகிட்டீங்கன்னா அதிலிருந்து உங்களைக் காப்பாத்த வேண்டிய பொறுப்பு என்னோட தலையில்தான் விடியும்...'' விஷ்ணு சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஃபாரன்ஸிக் ரஹ்மான் உள்ளே வந்தார்.

''குட் ஈவினிங் ஸார்...''

''குட் ஈவினிங்... வாங்க ரஹ்மான்...''

''நீங்க வரச்சொன்னதா டிபார்ட்மெண்ட்ல சொன்னாங்க ஸார்...''

''எஸ்...! ஒரு கேஸ் விஷயமா உங்ககிட்டே கொஞ்சம் பேச வேண்டியிருந்தது. ப்ளீஸ்... மொதல்ல உட்கார்ங்க.''

ரஹ்மான் உட்கார்ந்தார்.

''சொல்லுங்க ஸார்...''

''சில்பா கடத்தப்பட்ட விவகாரத்தில் முரளிதரன் பயங்கரமாக தாக்கப்பட்ட சம்பவத்தில் சீன் ஆஃப் க்ரைம் பார்த்து ரிப்போர்ட் கொடுத்தது நீங்கதானே...?''

''ஆமா... ஸார்...''

''முரளிதரனை ரெண்டு பேர் தாக்கியிருக்காங்க. கத்தியால் பல இடங்கள்ல அவர் குத்தப்பட்டு உயிர்க்கு ஆபத்தான நிலைமையில ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணப்பட்டு - டாக்டர்கள் கொடுத்த தீவிர ட்ரீட்மெண்ட்டுக்குப் பின்னாடி உயிர் பிழைச்சிருக்கார். அவரைத் தாக்கிய அந்த ரெண்டு பேர் முகமூடிகள் போட்டிருந்ததால அவங்க யார்ன்னு முரளி தரனுக்கு அடையாளம் தெரியலை. இருந்தாலும் அவங்க யார்ன்னு கண்டு பிடிக்கறதுக்காக நான் ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறேன். அதுக்கு நீங்க உதவணும்...''

''சொல்லுங்க ஸார்...''

''முரளிதரன் அந்த ரெண்டு பேர்களிடமிருந்து சில்பாவை மீட்கறதுக்காகவும் தன்னைக் காப்பாத்திக்கறதுக்காகவும் ஒரு பெரிய போராட்டமே நடத்தியிருக்கார். இருந்தாலும் அவராலே முடியலை. உடம்பு பூராவும் பெருகிய ரத்தத் தோடு கீழே விழுந்து மயக்கமாயிட்டார். முரளிதரன் அவர் களோடு போராடியபோது அவங்களுக்கும் ஏதாவது ரத்தக் காயம் ஏற்பட்டு அந்த ரத்தம் முரளிதரனின் சட்டை பேண்ட்டில் பட்டிருக்கலாம் இல்லையா...?''

''பட்டிருக்கலாம் ஸார்...''

''அந்த ரத்தக் கறைகளை பரிசோதனை பண்ணிப் பார்த்தா தாக்கின அந்த நபர்களோட ரத்த க்ரூப் எதுன்னு தெரியு மில்லையா...?''

''கண்டிப்பா... ஸார்...''

''அதை நீங்க பண்ணணுமே...! ரத்தக்கறை பட்ட முரளி தரனின் பேண்ட் சர்ட் இப்போ ஃபாரன்ஸிக்கில்தானே இருக்கு?''

''ஆமா... ஸார்...''

''எனக்கு ஒரு மணி நேரத்துக்குள்ளே ரிப்போர்ட் வேணும்... கிடைக்குமா...?''



''கிடைக்கும் ஸார்...''

''தேங்க்யூ ரஹ்மான்... உங்க ரிப்போர்ட்டுக்காக வெயிட் பண்ணிட்டிருப்பேன்...''

ரஹ்மான் விடை பெற்றுக் கிளம்பிப் போனதும் விஷ்ணு விவேக்கை ஏறிட்டான்.

''என்ன பாஸ்...! ப்ளட் க்ரூப்பை வெச்சு நம்மால என்ன பண்ண முடியும்...?''

''இதோ பார் விஷ்ணு... சம்திங் ஈஸ் பெட்டர்தென் நத்திங்'ன்னு சொல்லுவாங்க. குற்றவாளிகள் யார்ங்கிறதைக் கண்டுபிடிக்கிறதுல முதல் முயற்சி எது தெரியுமா...? அந்த குற்றவாளிகள் வட்டத்தை சின்னது பண்றதுதான். முரளிதரனை தாக்கின நபர்கள் ரெண்டு பேரின் ரத்த க்ரூப்களோடு ஒப் பிட்டுப் பார்த்து அந்த ரத்த க்ரூப் அவங்களுக்கு இருந்தா அவங்களோட நடவடிக்கைகளை ரகசியமாய் கண்காணிக் கலாம்...''

''பாஸ்...! அதெல்லாம் சாவகாசமாய் பார்க்க வேண்டிய கேஸ்களுக்குப் பொருந்தும். இந்த கேஸ்ல நமக்கு அவ காசமே கிடையாது. ஒன்பது மணி நேரத்துக்குள்ளே நாம சில்பாவை மீட்கணும். அந்த பங்கஜாட்சனுக்கு முன்னாடி நிறுத்தணும்...''

ரூபலா குறுக்கிட்டாள்.

''விஷ்ணு சொல்றதுதாங்க சரி... இந்த ப்ளட் க்ரூப் மேட்டர் எப்படியிருக்கு தெரியுமா... தலையைச் சுத்தி மூக்கைத் தொடற மாதிரி இருக்கு... இதையெல்லாம் விட்டுட்டு நீங்க ஏதாவது அதிரடி நடவடிக்கையில் இறங்கினாத்தான் சில்பாவைக் கண்டுபிடிக்க முடியும்...''

''ரூபி...! இந்த கேஸுக்கு வேண்டியது வேகம் இல்லை. விவேகம்... அக்கம் பக்கம் பார்த்து நிதானமா ஸ்டெப் எடுத்து வெச்சாத்தான் குற்றவாளிகளை நெருங்க முடியும்...''

''அதுக்குள்ள 'கொக்கரக்கோ'ன்னு கோழி கூவி பொழுது விடிஞ்சிடும் பாஸ்...''

விவேக் மேற்கொண்டு பேசும் முன் அவனுடைய செல்போன் கூப்பிட்டது.

எடுத்தான். செல்போன் டிஸ்ப்ளேயில் ராஜவர்மா அழைப்பது தெரிந்தது. காதுக்கு பொருத்தி குரல் கொடுத்தான்.

''சொல்லுங்க ஸார்...''

''மிஸ்டர் விவேக்! ஒரு விரும்பத்தகாத சம்பவம் நடந்து விட்டது.''

''என்ன...?''

''சில்பாவின் கோச் கேசவமேனன்...''

''அவர்க்கு என்ன...?''

''கொலை செய்யப்பட்டு விட்டார். குளியலறை 'பாத் டப்'பில் கழுத்து அறுபட்ட நிலையில் கோர மரணம்.''




**பா**த் டப்பில் இருந்த தண்ணீர் முழுவதும் ரத்தம் கலந்து சிவப்பாய் தெரிய, அதன் நடுவில் கழுத்து அறுபட்டு திறந்த விழிகளோடு இறந்து கிடந்தார் கேசவமேனன். போலீஸ், சம்பிரதாயங்கள் சுற்றிலும் நிகழ்ந்து கொண்டிருக்க, விவேக்கும் விஷ்ணுவும் அந்த கோரத்தை மேற்கொண்டு பார்க்க முடியாமல் குளியலறையை விட்டு வெளியே வந்தனர்.

வெளியே ராஜவர்மா பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார்.

''சில்பா கடத்தப்பட்ட சில மணி நேரங்களுக்குள்ளாகவே அவருடைய பயிற்சியாளர் மிகவும் கொடூரமான முறையில்



கொலை செய்யப்பட்டுள்ளார். இதன் பின்னணி என்ன...? தீவிரவாதிகளின் கைவரிசையா... அல்லது... தனிப்பட்ட விரோதமா...?''

''முழுமையான போலீஸ் விசாரணைகருப் பிறகுதான் தெரியும்.''

''அந்த அரவாணி பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா...?''

''ஒலிம்பிக் கமிட்டிக்கு அரவாணியின் போட்டோக்களை அனுப்பி வைத்துள்ளோம். இன்று இரவுக்குள் தகவல் கிடைத்துவிடும்...''

''பயிற்சியாளர் கேசவமேனன் குடிப்பழக்கம் உள்ளவர் என்று சொல்லப்படுவது உண்மையா?''

''முழுப் பொய். கேசவமேனனை எனக்கு பல வருஷங்களாகத் தெரியும். கல்யாணம் செய்து கொள்ளாமல் சுத்தமான ஒரு பிரம்மச்சாரியாய் வாழ்ந்தார். தடகளப் போட்டிகளில் இந்தியா தங்கம் வாங்க வேண்டும் என்பது அவருடைய நீண்டகால ஆசை. எத்தனையோ பேர்க்கு பயிற்சி கொடுத்த அவர், சில்பாவிடம் தனி ஈடுபாடு கொண்டு அவர்க்கு விசேஷ பயிற்சி கொடுத்து வந்தார். இவர்கள் மேல் யார்க்கு என்ன கோபமோ தெரியவில்லை. சில்பா கடத்தப்பட்டுள்ளார். கேசவமேனன் கொலை செய்யப்பட்டு உள்ளார்...''

ஒரு இளம் நிருபர் குறுக்கிட்டு கேட்டார்.

''சக வீராங்கனைகளுக்கு சில்பாவின் மேல் பொறாமையும் கேசவமேனன் மேல் கோபமும் இருந்ததாகச் சொல்லப்படுவது உண்மையா...?''

ராஜவர்மாவின் முகம் கோபத்தில் சிவந்தது. ''இதோ பாருங்கள்... நீங்களாகவே ஏதாவது கற்பனை பண்ணி அபத்தமான கேள்விகளைக் கேட்டுகிட்டு இருக்க வேண்டாம். கொலை செய்கிற அளவுக்கோ ஒரு பெண்ணைக் கடத்திக்

கொண்டு போகிற அளவுக்கோ யாரும் கிரிமினல்ஸ் கிடை யாது... அங்கே பாருங்கள்... சக வீரர்களும் வீராங்கனை களும் எப்படி இடிந்து போய் உட்கார்ந்து இருக்கிறார்கள் என்று...! மூன்று பெண்கள் மயக்கமே போட்டு விட்டார்கள்.''

இன்னொரு நிருபர் கேள்வி கேட்க முயல ராஜவர்மா கையமர்த்தினார்.

''நோ மோர் கொஸ்டியன்ஸ் ப்ளீஸ். போலீஸ் விசாரணைகள் முடிந்த பிறகு நானே உங்களைக் கூப்பிட்டுப் பேசுகிறேன்... இப்போதைக்கு என்னை விட்டு விடுங்கள்...''

பத்திரிகை நிருபர்கள் கலைந்து போக, ராஜவர்மா விவேக் - விஷ்ணுவிடம் வந்தார். ''என்னுடைய வாயைப் பிடுங்கி பரபரப்பாய் ஏதோ செய்தி போட வேண்டும் என்று அலைகிறார்கள்.''

விவேக் பெருமூச்சோடு அவரை ஏறிட்டான்.

''ஸார்... சில்பா கடத்தப்பட்ட விவகாரமே இன்னும் சூடு தணியவில்லை. அதற்குள் இப்படியொரு கொடூர மரணம். சில்பாவைக் கடத்தியவர்கள்தான் இதையும் செய்து இருக்க வேண்டும்...''

''இந்தக் கடத்தலுக்கும் கொலைக்கும் என்ன மோட்டீவ் என்பதும் புரியவில்லை விவேக்...''

''ஸார்... அந்த அரவாணி சம்பந்தமான ஒலிம்பிக் கமிட்டி யின் ரிப்போர்ட்டை நாம் விரைந்து பெற்றால் இந்த கேஸில் ஒரு தெளிவு கிடைக்கும்.''

ராஜவர்மா சுற்றும் முற்றும் ஒரு தடவை பார்த்துவிட்டு விவேக்கிடம் தாழ்ந்த குரலில் சொன்னார்.

''ரிப்போர்ட் வந்து விட்டது விவேக்...''



விவேக் திகைப்பாய் அவரைப் பார்த்தான். ''ரிப்போர்ட் வந்து விட்டதா...? பத்திரிகை நிருபர்களிடம் இன்னமும் ரிப்போர்ட் வரவில்லை என்று சொன்னீர்களே...?''

''அது பொய்...! ரிப்போர்ட்டை இப்போதைக்கு பத்திரிகை களுக்கு கொடுக்க வேண்டாம் என்று ஒலிம்பிக் கமிட்டி வேண்டுகோள் விடுத்து இருக்கிறது...''

''ரிப்போர்ட்டில் அந்த அரவாணியைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் ஸார்...?''

''அந்த அரவாணி ஒரு தீவிரவாதி கிடையாது. அவர் ஒரு முன்னாள் ஒலிம்பிக் மல்யுத்த வீரர். பெயர் டிசிங்கா. பல்கேரியா நாட்டைச் சேர்ந்தவர். 1980-ல் மாஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் மல்யுத்த போட்டி ஒன்றில் தங்கம் வென்ற டிசிங்கா 1985 வரை ஆண் மகனாகவே இருந்தார். அதற்குப் பிறகு அவருடைய உடம்பில் பெண்ணுக்குரிய மாற்றங்கள். தொடர்ந்து ஆணாகவே இருக்க விரும்பிய டிசிங்கா பல்கேரியாவில் புகழ்பெற்ற டாக்டரைப் போய்ப் பார்த்து தன்னுடைய பிரச்னையைச் சொல்லியுள்ளார். டாக்டரும் ட்ரீட்மெண்ட் கொடுத்துள்ளார். ஆனால் ட்ரீட்மெண்ட் பலன் தரவில்லை. அதற்கு பதிலாக அவருடைய உடலமைப்பு அரவாணியாக மாறியது. கோபம் கொண்ட டிசிங்கா அந்த டாக்டரைக் கொலை செய்துவிட்டுத் தப்பி விட்டார். போலீஸ் அவரைப் பிடிக்க முயன்றது. முடியவில்லை. இரண்டாண்டுகள் பல்கேரியாவிலேயே தலை மறைவாக இருந்த டிசிங்கா தன்னுடைய முக அமைப்பை ஃப்ளஷ் மோல்டிங்கால் மாற்றிக் கொண்டு போலி பாஸ்போர்ட் மூலம் வெளிநாடு களுக்குப் போய் தலைமறைவாய் இருந்துள்ளார். அதே மாதிரிதான் அவர் இந்தியாவுக்கும் வந்திருக்க முடியும். டிசிங்கா ரெஸ்டாரெண்ட்டில் இருந்தபோது உங்களுடைய கார் அங்கே வந்து நின்றிருக்கிறது. காரின் தலையில் இருந்த ரிவால்விங் ரெட்லைட்டைப் பார்த்துவிட்ட டிசிங்கா நீங்கள்

போலீஸ் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்தவர் என்பதைப் புரிந்து கொண்டு டாய்லெட்டுக்குள் புகுந்திருக்கிறார்.''

விஷ்ணு புன்னகைத்தான். ''அந்த விநாடி என்னுடைய பார்வையில் டிசிங்கா பட்டுவிட்டார்.''

''எஸ்...''

விவேக் தன்னுடைய தாடையைத் தேய்த்தான்.

''ஸோ... டிசிங்கா ஒரு தீவிரவாதி கிடையாது. இண்ட்டர் போல் போலீஸாரால் தேடப்படுகிற ஒரு கொலைக் குற்றவாளி.''

''ஆமாம்...! இந்தியாவில் வந்து இறந்து போய் விட்ட அவருடைய உடலைப் பெற்றுப் போக பல்கேரியா போலீஸார் விமானத்தில் வந்து கொண்டிருப்பதாக செய்தி...'' ராஜவர்மா சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவர்க்கு செல்போன் அழைப்பு வர ஒரு 'எக்ஸ்க்யூஸ்மீ' சொல்லி விட்டு செல்போனோடு தள்ளிப் போனார்.

விஷ்ணு விவேக்கிடம் நிமிர்ந்தான்.

''பாஸ்... கேஸோட ரூட் மீட்டர் கேஜிலிருந்து மாறி பிராட்கேஜுக்கு வந்துடுச்சு... டிசிங்காவுக்கும் சில்பா விவகாரத்துக்கும் ஒரு நூலிழை சம்பந்தம் கூடக் கிடையாது. நீங்க போட்ட சபதத்துக்கு இன்னும் எட்டு மணி நேரம் தான் உயிர் இருக்கு பாஸ்... என்ன பண்ணப் போறீங்க...?''

''கிளம்பு...''

''எங்கே பாஸ்...?''

''போனதும் தெரியும்...''

விவேக் வேகமாக வெளியேற - விஷ்ணு குழப்பமாய் விவேக்கைப் பின் தொடர்ந்தான்.






அந்த பங்களாவுக்குள் கார் நுழைந்ததுமே விஷ்ணு கேட்டான்.

''பாஸ்...! இது பிஸ்வாஸ் பங்களா தானே?''

''ஆமா...!''

''இங்கே எதுக்காக பாஸ் வந்திருக்கோம்...?''

''பிஸ்வாஸ் யார்ன்னு உனக்குத் தெரியுமா?''

''தெரியும்... கிரீஸ் நாட்டில் பலவருஷம் இந்தியத் தூதராய் இருந்தவர்தானே பாஸ்?''

''பரவாயில்லையே...! உனக்கு ஜி.கே. கொஞ்சம் இம்ப்ரூவ் ஆயிருக்கு...''

''வாரத்துல ஒவ்வொரு ஞாயித்துக்கிழமையும் 'கலர்' பார்க்கப் போகாம ஜி.கே.யை வளர்த்துக்கிறேன் பாஸ்...''

விவேக் காரை விட்டு இறங்கி எதிர்ப்பட்ட உதவியாளரிடம் பிஸ்வாஸை சந்திக்க விரும்புவதாக சொல்ல - அவர் இண்ட்டர்காமில் பேசி அனுமதி வாங்கிக் கொடுத்தார்.

ஹால் சோபாவில் உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த பிஸ்வாஸ் உள்ளே நுழைந்த விவேக்கையும் விஷ்ணுவையும் வரவேற்று எதிரில் இருந்த சோபாவைக் காட்டினார்.

''மிஸ்டர் விவேக்...! உங்களைப் பற்றி நிறைய கேள்விப் பட்டிருக்கேன். பட் இன்றைக்குத்தான் உங்களைப் பார்க்கிறேன். உங்களைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி...''

''ஸார்...! உங்களிடம் ஒரு சின்ன என்கொய்ரி.''

''ப்ளீஸ்...''

''சில்பாவின் காதலன் முரளிதரனுக்கு கிரேக்க மொழியில் எழுதப்பட்ட ஒரு கடிதத்தை ராஜவர்மா, சி.பி.ஐ. டைரக்டர் மனோரஞ்சன், கேசவமேனன் இவர்களுக்கு நீங்கள் படித்துக் காட்டினதாய் கேள்விப்பட்டேன்...''

''ஆமாம்...''

''இந்த சென்னையில் உங்களைத் தவிர வேறு யார் யார்க்கெல்லாம் கிரேக்க மொழி தெரியும்...?''

''ஸாரி... எனக்குத் தெரியாது...''

''ஸாரி...! சில்பா கடத்தப்பட்டதைத் தொடர்ந்து இப் போது அவருடைய பயிற்சியாளர் கேசவமேனன் கொலை செய்யப்பட்டிருக்கிறார். உங்களுக்குத் தகவல் வந்ததா?''

''வந்தது...''

''யார் சொன்னார்கள்?''

''சி.பி.ஐ. டைரக்டர் மனோரஞ்சன்... காலையில்தான் என்னிடம் பேசிவிட்டுப் போனார். மனதுக்கு மிகவும் அதிர்ச்சியாய் இருந்தது.''

''ஸார்... நான் இந்த கேஸில் இப்போது முழுமூச்சாய் இறங்கியுள்ளேன். குற்றவாளிகள் யார்... எந்த திசையில் அவர்கள் இருக்கிறார்கள்... எதற்காக இப்படியெல்லாம் செய் கிறார்கள் என்கிற கேள்விகளுக்கு இதுவரை ஒரு பதில் கூடக் கிடைக்கவில்லை.''

பிஸ்வாஸ் புன்னகைத்தார்.

''ஓ.கே... மிஸ்டர் விவேக்...! நான் இப்போது உங்களுக்கு எந்த வகையில் உதவ வேண்டும் என்று நினைக்கிறீர்கள்...?''

''ஸார்... கிரேக்க மொழி தெரிந்த யாரோ இந்த கேஸில் இன்வால்வ் ஆகியிருக்கிறார்கள். நீங்கள் இந்தியத் தூதராய் க்ரீஸ் நாட்டில் இருந்தபோது அங்கே நீண்ட காலம் பணி



யாற்றிய இந்தியர்கள் யார் யார் என்பதைச் சொல்ல முடியுமா...?''

''அது ஒரு பெரிய லிஸ்டாக இருக்குமே...?''

''பரவாயில்லை ஸார்...''

''உங்களுக்கு அந்த லிஸ்ட் எப்போது வேண்டும்...?''

''இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் கிடைத்தால் பரவா யில்லை...''

விவேக் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஹாலை யொட்டியிருந்த உள்ளறையிலிருந்து ''பீப்... பீப்...'' சத்தம் கேட்டது.

பிஸ்வாஸ் எழுந்தார். உள்ளறையை நோக்கி நடக்க ஆரம் பித்தவர் விவேக்கைப் பார்த்துச் சொன்னார்.

''நீங்களும் உள்ளே வரலாம்... சி.வி.சி.யில் இருந்து போன் வந்து இருக்கலாம் என்று நினைக்கிறேன். நீங்களும் போலீஸ் மென். இதில் எந்த ரகசியமும் கிடையாது.'' பிஸ் வாஸ் சொல்லிக் கொண்டே முன்னால் போக விஷ்ணு விவேக்கின் காதைக் கடித்தான்.

''பாஸ்...! சி.வி.சி.ன்னா சென்ட்ரல் விஜிலென்ஸ் கமிஷன் தானே...?''

''ஆமா...''

''இவர்க்கும் சி.வி.சி.க்கும் என்ன சம்பந்தம்... பாஸ்...?''

''சி.வி.சி.க்கு இப்போ இவர்தான் ஹானரரி சேர்மன்.''

அறைக்குள் நுழைந்த பிஸ்வாஸ் ஷெல்ஃபில் இருந்த புத்தகங்களைத் தள்ளி சிவப்பு இண்டிகேட்டரோடு ஒளிர்ந்து கொண்டிருந்த செல்போனை எடுத்து காதுக்கு வைத்தார்.

''எஸ்...''

"........"

"எனக்கு செய்தி வந்துவிட்டது. சில்பா கடத்தப்பட்ட விவகாரமும், கேசவமேனன் கொலை செய்யப்பட்ட விவகாரமும் இப்போது இந்தியாவையே சூடுபடுத்திக் கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் உள்ள ஒலிம்பிக் வீரர்களும் வீராங்கனைகளும் மிகுந்த எச்சரிக்கையோடு இருப்பது அவசியம்... நம் சென்ட்ரல் விஜிலன்ஸ் கமிஷன் மூலமாக நிலைமைகளை உன்னிப்பாக கவனித்து வர எல்லா ஏற்பாடுகளையும் பண்ணியிருக்கிறோம்."

"..........."

"எஸ்... எஸ்... அதுவும் எனக்குத் தெரியும். மிஸ்டர் விவேக்கும் விஷ்ணுவும் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முழு வீச்சில் இறங்கியுள்ளார்கள். இப்போதுகூட அவர்கள் எனக்குப் பக்கத்தில்தான் இருக்கிறார்கள்... விவேக் சில விபரங்களை என்னிடம் கேட்டிருக்கிறார். அந்த விபரங்கள் அவருடைய விசாரணைக்கு பெரும் அளவில் உதவி புரியும்..."

"......"

"நோ... நோ... இப்போது நடந்து விட்ட சம்பவங்களுக்கும் பாகிஸ்தானுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. தயவு செய்து இது மாதிரியான 'காஸிப்'களை உருவாக்காதீர்கள். அதே போல் நம்முடைய உளவுத்துறை நமக்கு கொடுக்கும் செய்திகளில் எண்பது சதவீதத்தை மட்டுமே நம்ப வேண்டும். பாக்கி இருபது சதவீத பொய்ச் செய்திகளை நாம் அடையாளம் தெரிந்து கொண்டு புறக்கணிக்க வேண்டும்..."

"........."

"ஓ.கே... நானும் நிலைமையை உன்னிப்பாய்க் கவனித்து வருகிறேன்... இன்னும் ஒரு மணி நேரம் கழித்து மறுபடியும் பேசுவோம். தகவல்களை பரிமாறிக் கொள்வோம்."



பிஸ்வாஸ் செல்போனை அணைத்து புத்தகங்களுக்குப் பின்னால் வைத்துவிட்டு விவேக்கிடம் திரும்பினார்.

"நாம் ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதற்காக பாகிஸ்தான் செய்யும் சதியோ என்று நம் சி.வி.சி. அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளார்கள். பாகிஸ்தான் நமக்கு பகை நாடுதான். அதற்காக நம் நாட்டில் நடைபெறும் ஒவ்வொரு அசம்பாவித காரியத்துக்கும் அந்த நாட்டை குற்றம் சொல்வது தவறு. இந்தியாவைப் பிடிக்காத இந்தியர்கள் இந்த இந்தியாவிலேயே இருக்கும்போது பக்கத்து நாட்டைக் குறை சொல்லி என்ன பயன்...?"

"ஐ... அக்ரி... வித் யூ ஸார்..."

"மிஸ்டர் விவேக்...! சில்பாவைக் கடத்திய, கேசவ மேனனைக் கொலை செய்த குற்றவாளிகளைப் பிடிக்க உங்களுக்கு தேவைப்படுகிற, எல்லாத் தகவல்களையும் கொடுத்து உதவ நானும் சென்ட்ரல் விஜிலன்ஸ் கமிஷன் அதிகாரிகளும் தயாராக இருக்கோம்..."

பிஸ்வாஸ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே விவேக்கின் செல்போன் தன் ரிங் டோனை வெளியிட்டது. விவேக் செல்லை எடுத்து டிஸ்ப்ளேயில் யார் என்று பார்த்தான்.

ஃபாரன்ஸிக் ரஹ்மான்.

குரல் கொடுத்தார்.

"சொல்லுங்க ரஹ்மான்..."

"ஸார்...! கத்தியால் குத்தப்பட்ட முரளிதரனின் ஆடைகளில் பட்டிருந்த ரத்தக்கறையை எடுத்து பரிசோதனை செய்து பார்த்ததில் முரளிதரனின் ரத்த க்ரூப்பைத் தவிர வேறு இரண்டு ரத்த க்ரூப் இருந்தது. அந்த இரண்டு ரத்த க்ரூப்பும் கொலையாளிகளின் ரத்த க்ரூப்பாய் இருக்கலாம் என்பது என்னோட கருத்து."

''ரெண்டும் என்ன க்ரூப் ரத்தம்?''

''ஏ. பாஸிட்டீவ். அப்புறம் ஓ. நெகட்டீவ்.''

''முரளிதரனின் ரத்த க்ரூப் எது?''

''பி.நெகட்டீவ்...''

''இந்த ரிப்போர்ட்டைப் பத்தி இப்போதைக்கு வெளியே யார்க்கும் தெரிய வேண்டாம்.''

''எஸ்... ஸார்.''




கண் மூடி சோர்வாய்ப் படுத்திருந்த முரளிதரன் தன்னை யாரோ அழைப்பதை உணர்ந்து விழிகளை சிரமப்பட்டுத் திறந்தான். நேரம் ராத்திரி ஒன்பது மணி.

அவனுடைய பார்வைக்கு விவேக், விஷ்ணு, ஃபாரன்ஸிக் ரஹ்மான் கொஞ்சம் தள்ளி ஹாஸ்பிட்டலின் டாக்டர் பிரசாத் கிடைத்தார்கள்.

''ஸ... ஸார்...'' சிரமமாய் எழுந்து உட்கார முயன்ற முரளிதரனைக் கையமர்த்தி படுக்க வைத்தான் விவேக்.

''நீங்க அப்படியே படுத்துகிட்டு பேசினா போதும் முரளி. உங்களை கத்தியால குத்தி படுகாயப்படுத்திய அந்த ரெண்டு பேர்களோட ரத்தம் உங்க சட்டையில் பட்டிருந்ததை ஃபாரன்ஸிக் கண்டு பிடிச்சு ரிப்போர்ட் கொடுத்து இருக்காங்க. உங்க ரத்த க்ரூப் பி. நெகட்டீவ். அந்த ரெண்டு பேர்களோட ரத்த க்ரூப் ஏ.பாஸிட்டீவ் - ஓ.நெகட்டீவ்...''

முரளிதரனின் முகத்தில் பிரகாசம்... ''ஸார்! இதை வெச்சுகிட்டு கொலையாளிகளைக் கண்டு பிடிச்சுட முடியுமா...?''

''முயற்சி பண்ணினால் முடியும். உங்களுக்குத் தெரிஞ்ச நண்பர்கள் வட்டாரத்தில் யார் யார்க்கு ஏ.பாஸிட்டீவ். ஓ.நெகட்டீவ் ரத்தம் இருக்குங்கிறதை சொன்னால் அதை வெச்சுகிட்டு இன்வெஸ்டிகேஷன் பண்ணி குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முடியும்...''



''ஸார்...! என்னுடைய நண்பர்கள் எல்லாருமே எனக்காக உயிரைக் கொடுக்கக்கூடத் தயங்காதவங்க... அவங்கள்ல யாரும் இப்படிப்பட்ட காரியத்தை பண்ணியிருக்க மாட்டாங்க...''

''நோ... முரளி...! இந்தக் காலத்துல யாரையும் நம்ப முடியாது... நீங்க உங்க நண்பர்களோட லிஸ்ட்டையும், யார் யார் மேல உங்களுக்கு சந்தேகம் இருக்கோ அந்த லிஸ்ட்டையும் என்கிட்டே கொடுங்க. நாங்க பார்த்துக்கிறோம்... உங்களைத் தாக்கினவங்க அப்போதைக்கு அடையாளம் தெரியாமே இருக்கிறதுக்காக முகங்களுக்கு முகமூடி போட்டு இருக்கலாம். ஆனா இப்போ அவங்க கையில காயம் கண்டிப்பா இருக்கும்...''

முரளிதரன் யோசித்து யோசித்து ஒவ்வொரு பெயராய்ச் சொல்ல -

விஷ்ணு கையில் ஒரு பாக்கெட் டயரியை வைத்து பால்பாய்ண்ட் பேனாவால் எழுதிக் கொண்டே வந்தான்.

கிட்டத்தட்ட 20 பேர். முகவரிகளோடு பெயர்கள்.

விவேக் முரளிதரனின் தோளை மெல்லத் தட்டிக் கொடுத்தான்.

''இது போதும். இப்போ மணி ஒன்பதே கால். இன்னும் ரெண்டே மணி நேரத்தில் அந்த இரண்டு குற்றவாளிகள் யார் என்பதை ஓரளவுக்கு யூகம் பண்ணி அவர்களை நெருங்கி விடலாம்... விஷ்ணு! புறப்படு...!''

விவேக் டாக்டர் பிரசாத்திடமும், ஃபாரன்ஸிக் ரஹ்மானிடமும் விடைபெற்றுக் கொண்டு அறையினின்றும் வெளிப்பட்டான். விஷ்ணு பின் தொடர்ந்தான்.

''பாஸ்...''

''என்னடா...?''

''இது ஒர்க் அவுட் ஆகுமா...?''

''எது...?''

லிஃப்டில் இறங்கினார்கள்.

''முரளிதரன் கொடுத்த இந்த லிஸ்ட்டை வெச்சுகிட்டு ஏ.பாஸிட்டிவ்... ஓ. நெகட்டிவ் ரத்த க்ரூப் உள்ளவங்களை தேடிக் கண்டு பிடிக்கிறது...?''

''இதோ பார் விஷ்ணு... இந்த கேஸில் நமக்கு கிடைச்சிருக்கிற ஒரே க்ளூ இதுதான்... இது கொஞ்சம் கஷ்டமான காரியம்தான்... சிரமப்பட்டு இன்வெஸ்டிகேட் பண்ணினால் பலன் கிடைக்கும்ன்னு என்னோட மனசுக்குப் படுது. நீ பாதி அட்ரஸைப் பாரு. நான் பாதி அட்ரஸைப் பார்க்கிறேன்...''

''பாஸ்...! நம்ம கெடு முடிய... இன்னும் ஐந்தே முக்கால் மணி நேரம்தான் இருக்கு...''

''கவலைப்படாதே... கண்டு பிடிச்சுடலாம்...''

## 15

**வி**ஷ்ணு பதினோரு மணி வரைக்கும் அலைந்து லிஸ்டில் இருந்த பாதி நபர்களைப் பார்த்துவிட்டு, விவேக்கின் வீட்டுக்குத் திரும்பியபோது விவேக் சோபாவில் உட்கார்ந்து டி.வி.யில் ஐரோப்பிய கால் பந்து போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தான். விஷ்ணுவைப் பார்த்ததும் கேட்டான்.

''என்னடா... எவனாவது மாட்டினானா?''

''இல்ல... பாஸ்... அந்த ரெண்டு ரத்த க்ரூப் யாருக்குமேயில்லை... உங்க சைடில் எப்படி பாஸ்...?''



ரூபலா உள்ளேயிருந்து வந்தபடியே சொன்னாள். ''உன்னோட பாஸ் கொலையாளியைக் கண்டுபிடிச்சுட்டார். உன்னையும் கூட்டிட்டுப் போகத்தான் காத்திருக்கார்.''

''நெஜமாலுமா பாஸ்...?''

''ம்...''

''கொலையாளி யார் பாஸ்...?''

''கிளம்பு...! நேர்லயே போய் பார்த்துடலாம்.'' விவேக் ட்ரஸ் மாற்றிக் கொண்டு கார்க்கு வர - விஷ்ணு வியப்பில் பிளந்த வாயோடு பின் தொடர்ந்தான்.

காரில் போகும்போது விவேக்கின் தோள் பட்டையை சுரண்டினான் விஷ்ணு.

''யார்... பாஸ்...?''

''பேசாம வா...''

''ஒரு சின்ன க்ளூ கொடுங்க பாஸ்...''

''பதினஞ்சு நிமிஷம் பொறுத்துக்க முடியாதா...? சரி அவரோட பங்களா சாலிகிராமம் இந்திரா காந்தி தெருவில் இருக்கு...''

விஷ்ணு தன்னுடைய பின்னந்தலையைப் பிறாண்டினான். ''சாலிகிராமம்... இந்திரா காந்தி தெருவில் யார் இருக்காங்க?''

''யோசனை பண்ணிகிட்டே வா...''

விஷ்ணு யோசித்து யோசித்து வியர்த்துப் போக அடுத்த பதினைந்தாவது நிமிஷம் சாலிகிராமம் வந்தது. இந்திராகாந்தி தெருவில் இருந்த அந்த பங்களாவுக்கு முன்னால் போய் நின்றது கார். கேட்டில் நின்றிருந்த வாட்ச்மேன் யார் என்று கேட்டுக் கொண்டு முன்னால் வர விவேக் அடையாள அட்டையைக் காட்டி அவனுடைய வாயை அடைத்துவிட்டு உள்ளே போய் போர்டிகோ படிகள் ஏறி அழைப்பு மணிக்கு வேலை கொடுத்தான்.

சரியாய் ஒரு நிமிஷம்.

கதவு திறந்தது.

டாக்டர் பிரசாத் நைட் கவுனில் தூக்கக் கலக்கத்தோடு தெரிந்தார். விவேக்கைப் பார்த்ததும் முகம் மாறினார்.

"எ... எஸ்..."

"உங்ககிட்டே கொஞ்சம் பேசணும் டாக்டர்."

"எ... எ... என்ன பேசணும்...?"

"அதை இப்படி வாசல்ல நின்னு பேசிட்டிருக்க முடியாது... டாக்டர்... உள்ளே போய்ப் பேசலாமா?"

"வா... வாங்க..."

உள்ளே போனார்கள். வீடு அமைதியாய் இருந்தது.

"வீட்ல யாரும் இல்லையா டாக்டர்...?"

"மனைவி ஒரு கல்யாணத்துக்காக ஊருக்குப் போயிருக்கா..."

சோபாவில் மூன்று பேரும் உட்கார்ந்தார்கள். சில விநாடி மௌனத்துக்குப் பிறகு டாக்டர் பிரசாத் நைட் கவுனில் வியர்த்து வழிந்து கொண்டே கேட்டார்.

"என்கிட்டே என்ன பேசணும்...?"

விவேக் அவரை ஏறிட்டான். "டாக்டர்...! நான் நேரிடையாவே விஷயத்துக்கு வந்துடறேன். சுத்தி வளைச்சுப் பேச எனக்கு விருப்பம் இல்லை... சில்பா கடத்தப்பட்டதுக்கும், கேசவமேனன் கொலை செய்யப்பட்டதுக்கும் நீங்களும் முரளிதரனும்தான் காரணம்ன்னு சொன்னா அதை நீங்க ஒத்துக்குவீங்களா... மாட்டீங்களா?"

பிரசாத் கோபத்தில் முகம் சிவந்து கொண்டே இரைந்தார். "வாட் நான்சென்ஸ்... யூ... ஆர் டாக்கிங்...?"



விவேக் புன்னகைத்தான். "அயாம்... டாக்கிங் வித் சென்ஸ் டாக்டர்...! உங்க ஹாஸ்பிட்டலில் கத்திக் குத்தி காயங்களுக்காக ட்ரீட்மெண்ட் எடுத்துகிட்டிருந்த முரளிதரனை இன்னிக்கு மத்தியானம் நான் முதல் தடவை பார்த்தபோது என்னோட மனசுக்குள்ளே ஒரு ஆச்சர்யம் பரவியது. அந்த ஆச்சர்யத்துக்கு என்ன காரணம் தெரியுமா டாக்டர்...?"

டாக்டர் பிரசாத் வியர்வை மழையில் இருக்க - விவேக் தொடர்ந்தான். "பொதுவா எதிரிகள் கத்தியால் குத்தும் போது மார்பை குறிவெச்சு குத்துவாங்க... முதுகைக் குறி வெச்சு இல்லேன்னா அடிவயிற்றை குறிவெச்சு குத்துவாங்க. ஏன்னா இந்த இடங்கள்ல கத்திக் குத்து விழுந்தாத்தான் உயிர் போகும்... ஆனா முரளிதரனோட உடம்பில் கத்திக்குத்து விழுந்த இடங்கள் எது தெரியுமா...? தோள்பட்டை, முழங்கை, தொடை, ஆடுகால் சதை. இந்த இடங்களில் விழுந்த கத்திக் குத்துகள் ஆழமானது இல்லை... கீறல்கள்தான். பாண்டேஜ் துணிகளை அடர்த்தியாய் சுற்றி முரளிதரனோட காயங்கள் பெரிசா காட்டப்பட்டிருக்குன்னு என்னோட மனசுக்குப் பட்டது. அது மட்டுமல்லாமல் கத்திக் குத்து சம்பவம் நடந்த இடத்துக்குப் பக்கத்திலேயே 'ரிச் மாண்டி' என்கிற ஒரு பெரிய ஹாஸ்பிட்டல் இருக்கும்போது மூணு கிலோ மீட்டர் தூரம் தள்ளியிருக்கிற உங்களுடைய ஹாஸ்பிட்டலுக்கு ட்ரீட்மெண்ட்டுக்காக முரளிதரனை ஏன் கொண்டு வரணும்...? இந்த சந்தேகங்கள் என்னோட மனசுக்குள் உதித்ததுமே நான் இதை விஷ்ணுவிடம்கூட சொல்லாமல் ஒரு திட்டம் போட்டேன்..."

பிரசாத் மூச்சிரைத்தபடி விவேக்கையே பார்க்க அவன் சிரிப்போடு தொடர்ந்தான்.

"முரளிதரன் கொடுத்த ஸ்டேட்மெண்ட்டில் தன்னை யாரோ இரண்டு பேர் கத்தியால் குத்தி படுகாயப்படுத்தி விட்டு சில்பாவைக் காரோடு கடத்திக் கொண்டு போய்

விட்டார்கள் என்று சொல்லியிருந்தார். அந்த ஸ்டேட்மெண்ட் உண்மையா பொய்யா என்பதைக் கண்டுபிடிக்க முரளி தரனின் சட்டையிலும் பேண்ட்டிலும் பட்டிருந்த ரத்தக் கறை களில் அந்த இரண்டு குற்றவாளிகளின் ரத்தமும் கலந்து இருப்பதாக பொய்யாய் ரிப்போர்ட் கொடுக்கும்படி நான் ஃபாரன்ஸிக் ரஹ்மானுக்கு ரகசியமாய் போன் செய்து சொன்னேன். அவரும் அப்படியே ரிப்போர்ட் கொடுத்தார். உண்மையிலேயே முரளிதரனின் சட்டையிலும் பேண்டிலும் அவருடைய ரத்தக்கறை மட்டுமே இருந்தது. வேறு இரண்டு 'ரத்த க்ரூப்'கள் முரளிதரனின் உடைகளில் இருந்ததாய் ஃபாரன்ஸிக் ரிப்போர்ட்டைக் காட்டி நான் சொன்னதும் முரளிதரன் ஒரு நொடிக்கும் குறைவான நேரத்தில் அதிர்ந்து போய் எனக்குப் பின்னால் நின்றிருந்த உங்களைப் பார்த்தார். அதை நான் கவனித்தேன்...''

''ஒரு நிமிஷம் மிஸ்டர் விவேக்...! எனக்கு ஒரு சந்தேகம்...'' டாக்டர் பிரசாத் குறுக்கிட்டார்.

''என்ன...?''

''நீங்க க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸர் பதவியிலிருந்து ராஜினாமா பண்ணிட்டு எப்பயிருந்து கதாசிரியரா மாறினீங்க? உங்க கற்பனை அபாரம்... தமிழ்நாட்டுக்கு ஒரு நல்ல கதாசிரியர் கிடைச்சுட்டார்ன்னு நினைக்கிறேன்...''

''ஸோ... நான் சொன்னதெல்லாம் கற்பனைன்னு சொல்ல வர்றீங்களா டாக்டர்...?''

''ஷ்யூர்...''

''அப்படீன்னா நீங்களும் முரளிதரனும் ஒரு மணி நேரத் துக்கு முந்தி பேசிக்கிட்டது கூட கற்பனையா?''

''நானும் முரளிதரனும் பேசிக்கிட்டோமா... என்ன பேசிக் கிட்டோம்...?''



''டாக்டர்... க்ரிமினல்கள் புத்திசாலின்னா போலீஸ் டிபார்ட் மெண்ட்டில் இருக்கிறவங்க அதி புத்திசாலிகள். ராத்திரி ஒன்பது மணிக்கு முரளிதரனைப் பார்க்க நான், விஷ்ணு, ஃபாரன்ஸிக் ரஹ்மான் மூணு பேரும் வந்தோம்... ரெண்டு பேரோட ப்ளட் க்ரூப் கிடைச்சிருக்குன்னு சொல்லி முரளி தரன்கிட்டே நான் பேசிட்டிருக்கும்போதே ரஹ்மான் தான் கையோடு கொண்டு வந்திருந்த பக் மைக்ரோ போனை கட்டிலுக்கு ஃபிக்ஸ் பண்ணிட்டார். அதனோட ரிஸீவர் என்கிட்டே இருந்தது. நாங்க எல்லோரும் வெளியே வந்த பிறகு நான் எதிர்பார்த்த மாதிரியே கொஞ்ச நேரம் கழிச்சு நீங்க முரளிதரன் கிட்ட பேசினது எனக்குக் கேட்டது. அதை அப்படியே மைக்ரோ டேப் ரிக்கார்டரில் பதிவு பண்ணிட் டேன். போட்டுக் காட்டட்டுமா...?''

டாக்டர் பிரசாத் மறுபடியும் வியர்த்து வழிய ஆரம்பிக்க - விவேக் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்த மைக்ரோ டேப் ரிக்கார்டரை எடுத்து 'ஆன்' செய்தான்.

குரல்கள் கேட்டன.

**''என்ன... டாக்டர்... அந்த க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸர் விவேக் இப்படி சொல்லிட்டுப் போறான்...? என்னோட பேண்ட்டிலும் சட்டையிலும் வேற ரெண்டு பேரோட ரத்த க்ரூப் இருந்ததாமே...?'' - இது முரளிதரனின் குரல்.**

**''அதுதான் எனக்கும் ஆச்சர்யமா இருக்கு முரளி! உனக்கு ரத்த சேதம் அதிகமாயிருந்ததுன்னு காட்ற துக்காக உன்னோட ரத்தமான பி.நெகட்டீவ் ரத்தத்தை ப்ளட் பேங்க்கிலிருந்து எடுத்து சட்டையிலும் பேண்ட் டிலும் தெளிச்சு வெச்சிருந்தேன்...'' இது டாக்டர் பிரசாத்தின் குரல்.**

**''அப்படித் தெளிச்சது ஒருவேளை வேற க்ரூப் ரத்தமோ...?''**

"அப்படியிருக்காது முரளி...! நான் பார்த்துத்தானே எடுத்து வந்தேன்..."

"ஃபாரன்ஸிக் ரிப்போர்ட் இப்படிச் சொல்லுதே?"

"அது தப்பான ரிப்போர்ட்."

"என்ன பண்ணலாம்?"

"நாம பேசாம மௌனமா இருந்துட வேண்டியது தான்...! ஃப்ரண்ட்ஸோட லிஸ்ட்டை வாங்கிட்டுப் போயிருக்காங்கள்ல... வீதி வீதியா சுத்தி விசாரணை பண்ணிட்டு வரட்டும்..."

"சரி... சில்பா எப்படியிருக்கா...?"

"இன்னும் மயக்கம் தெளியலை. போட்ட இஞ்செக்ஷன் அப்படி... நாளைக்கு காலையில் ஆறு மணிக்குத்தான் கண்ணைத் திறந்து பார்ப்பா... அதுக்குள்ளே அவளுடைய மூச்சை ஒரேடியா நிறுத்தி ஏதாவது ஒரு பார்க்ல கொண்டு போய் போட்டுட வேண்டியதுதான்... நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காதே முரளி... நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன்..."

டேப்ரிக்கார்டரின் சுழற்சி நின்றது. டாக்டர் பிரசாத்தின் முகத்தில் இப்போது வெள்ளமாய் வியர்வை.

"இப்ப... என்ன... சொல்றீங்க டாக்டர்...?"

"........"

"இன்னும் பத்து செக்கண்ட்ஸ்ல நீங்க வாயைத் திறந்து உண்மையைச் சொல்லலைன்னா இந்த ஜடப் பொருள் வாயைத் திறக்கும்..." விவேக் சொல்லிக் கொண்டே இடுப்புக்குக் கை கொண்டு போய் துப்பாக்கியை எடுத்தான். "என்கௌண்ட்டர்ல யாரையும் சுட்டுத்தள்ள எனக்கு சிறப்பு அதிகாரம் இருக்கு. அதை நான் பயன்படுத்தறதும் பயன்படுத்



தாததும் நீங்க நடந்துக்கிற விதத்துலதான் இருக்கு...! உங்களுக்கு எப்படி வசதி! என்கௌண்ட்டர்ல செத்துப் போறீங்களா? இல்ல உண்மையைச் சொல்லப் போறீங்களா...?"

"சொ... சொல்லிடறேன்."

"சில்பா எங்கே...?"

"இதே வீட்ல... மாடி ரூம்ல மயக்கமா இருக்கா."

"வாங்க... மொதல்ல சில்பாவைப் போய்ப் பார்ப்போம்."




விவேக் டி.வி.யில் பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருக்க - ரூபலா பரவசமாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சில்பாவின் உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லையே?"

"ஒரு ஆபத்தும் கிடையாது. ஆழ்ந்த மயக்கம். தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்..."

"டாக்டர் பிரசாத்தும் முரளிதரனும் எதற்காக சில்பாவைக் கடத்தி கொலை செய்ய முயன்றார்கள்?"

"மேட்ச் ஃபிக்ஸிங்..." என்று சொல்லிச் சிரித்த விவேக் தொடர்ந்தான். "கிரிக்கெட்டைப் பீடித்து இருந்த இந்த மேட்ச் ஃபிக்ஸிங் வியாதி இப்போது ஒலிம்பிக் விளையாட்டுக்களையும் பற்றிக் கொண்டது. தடகளப் போட்டியில் நிச்சயமாக தங்கம் வெல்லக் கூடிய சாத்தியத்தில் இருந்தார் சில்பா. பத்துக்கும் குறைவான விநாடிகளில் 100 மீட்டர் தூரத்தை அவர் ஓடிக் கடப்பார் என்கிற உண்மை வெளிநாட்டில் உள்ள ஒரு விளையாட்டுக் கமிட்டிக்குத் தெரிந்ததும் சில்பாவை போட்டியில் பங்கேற்க விடாமல் செய்ய வேண்டும் என்று

விரும்பியது. அந்த விளையாட்டுக் கமிட்டியில் உள்ள ஒரு நபர்க்கும் டாக்டர் பிரசாத்துக்கும் ஏற்கெனவே நட்பு ரீதியான தொடர்பு இருந்தது. சில்பாவை போட்டியில் கலந்து கொள்ள விடாமல் செய்தால் டாக்டர் பிரசாத்துக்கு பத்து கோடி ரூபாய் தருவதாக அந்த விளையாட்டுக் கமிட்டி உறுதியளித்து பாதித் தொகையை அட்வான்ஸாகக் கொடுத்ததும் டாக்டர் பிரசாத் காய்களை நகர்த்த ஆரம்பித்தார். சில்பாவை தீவிரமாய் கண் காணித்தபோது சில்பாவுக்கு முரளிதரன் காதலனாய் இருப்பது தெரிந்தது. முரளிதரனை தனியாய் மடக்கினார் டாக்டர். 'கிடைக்கப் போகும் பத்து கோடியில் உனக்குப் பாதி' என்று சொன்னதும் முரளிதரனின் மனதில் சைத்தான் புகுந்தது. காதலித்த சில்பாவையே தீர்த்துக்கட்ட முடிவு செய்தார். அதற்காக ஒரு கடத்தல் நாடகத்தையும் போட்டார். உடல் மரத்துப் போகும் மருந்தை கை கால்களில் பூசிக் கொண்டு வலியில்லாமல் கத்தியால் கீறிக் கொண்டார்... முகம் தெரி யாத இரண்டு பேரைக் குற்றவாளிகளாகக் காட்டிவிட்டு டாக்டர் பிரசாத்தின் ஹாஸ்பிட்டலில் வந்து படுத்துக் கொண் டார்.''

''கேசவமேனன் கொலை எதற்காக...?''

''முரளிதரனை ஹாஸ்பிட்டலில் வந்து பார்த்துவிட்டுப் போன கேசவமேனன் வீட்டுக்குப் போனதும் டாக்டர்க்கு போன் செய்து முரளிதரனின் கத்திக் குத்து காயங்கள் பற்றி ஏதோ சந்தேகம் கேட்டு இருக்கிறார். வந்தது வினை. டாக்டர் உடனே கேசவமேனனின் வீட்டுக்குப் போய் அவருடைய மூச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வந்துவிட்டார்.''

விவேக்கிற்கு பக்கத்தில் நின்றிருந்த விஷ்ணு பத்திரிகை யாளர்களிடம் கேட்டான்.



''என்கிட்டே கேள்வி கேட்கமாட்டீங்களா?''

விஷ்ணுவிடம் மைக்கை நீட்டி ஒரு நிருபர் கேட்டார்.

''நாட்டின் பெருமையை வெளிநாட்டில் அடகு வைக்க முயன்ற டாக்டர் பிரசாத். முரளிதரன் போன்றவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்...?''

''நாடா முல்லிக்கை வரவழைக்க வேண்டியதுதான்.''

''அது யார் நாடா முல்லிக்...?''

''தூக்கில் போடற ஆள்...''